பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 16 திங்கட்கிழமை (28.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :94

# அரசின் உள்வீட்டு உண்மைகளை அம்பலப்படுத்த ஜே.வி.பி. முஸ்தீபு!

## நிலைமையைப் பகிரங்கப்படுத்தி தெற்கில் பிரசாரம் செய்ய முடிவு

கொழும்பு,பெப்ரவரி28

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் இணக்கத்துடன் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் - செயலாற்ற அரசு முன்வரவேண்டும். இல்லையேல் அரசின் உள்வீட்டு விடயங்களையும், உண்மைகளையும் மக்களிடம் சென்று அம்பலப்படுத்தவேண்டும். தென்னிலங்கை மக்களிடம் நிலைமையைப் பகிரங்கப்படுத்தவேண்டும்.**

**இவ்வாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தீர்மானித்திருக்கின்றது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.**

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஜே.வி.பியின் அரசியல் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் எழுந்துள்ள பிரச்சினைகள், பிரதான பங்காளிகளுடன் ஆலோசிக்காமல் அரசினால் மேற்கொள்ளப்படும் முடிவுகள் மற்றும் பொதுவான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துதல் போன்ற பல விடயங்கள் இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் உடல் தீயுடன் சங்கமமாகியது

கிளிநொச்சி, பெப்.28

நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்புவின் உடல் நேற்று நண்பகல் 12 மணியளவில் தீயுடன் சங்கமமாகியது.

கடந்த 23ஆம் திகதி சாவைத் தழுவிக் கொண்ட நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்புவின் உடல் தூயவன் அரசறிவியல் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது

நேற்றுக்காலை 10 மணியளவில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் மலர்மாலையை அவரது துணைவியாரும், பிள்ளைகளும், அணிவித்தனர், அதனைத் தொடர்ந்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர், பொறுப்பாளர்கள், தளபதிகள், மலர் மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து மக்களது மலரஞ்சலி இடம்பெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை நாளை சந்திக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,பெப்.28

ஜனாதிபதிக்கும்,ஜே.வி.பியினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் தலைமையிலான அரசின் முக்கிய அமைச்சர்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் பயனாக நாளை ஜே.வி.பி. தலைவர்களைச் சந்தித்துப் பேச ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

ஜே.வி.பியினருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் ரீதியான முறுகல் நிலையை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான மங்கள சமரவீர, சுசில் பிரேம ஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா போன்றோர், ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீர

(14ஆம் பக்கம் பார்க்க)



அம்பாறைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களால் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டபோது...

## அரசில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் கூட்டமும் நாளை

கொழும்பு,பெப்.28

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக ஆராய்வதற்காக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நாளை கூடுகிறது.

அரசில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் தலைவர்களை இந்தக் கூட்டத்தில் அவசியம் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் சார்பில் அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ மற்றும் செயலாளர் ரில்வின் சில்வா, நந்தன குணதிலக ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரியவருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் அரசின் பொது நிலைப்பாடு தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும். ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டதற்குப் பின்னர் ஜனாதிபதி தலைமையில் கூடும் ஆளும் கட்சித் தலைவர்களின் முதலாவது கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

## ஜனாதிபதி - இ.தொ.கா. இன்று சந்திப்பு? ஆனால் நேற்றுவரை அது உறுதியில்லை

கொழும்பு,பெப்.28

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைக்குமிடையில் இன்று திங்கட்கிழமை பேச்சு நடைபெறுமென முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் நேற்று மாலை வரை பேச்சுக்கான நேர அனுமதி இ.தொ.காவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லையென்று இ.தொ.காவின் பிரமுகரொருவர் அதிருப்தி வெளியிட்டார்.

அரசிற்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெறுவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்த பின்னர் இருதரப்புகள் இடையேயான நிலைமையைச் சுமுகமாக்குவதற்காக அரசின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான மங்கள சமரவீர கடந்தவார இறுதியில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் அந்தரங்கப் பேச்சுக்களை நடத்தினார்.

அப்போது இ.தொ.கா. சுட்டிக்காட்டிய பல பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்குத் தாம் கொண்டுவருவார் என அமைச்சர் மங்கள உறுதியளித்தார் என்று கூறப்பட்டது

ஆனாலும், கடுமையான வேலைப்பளு காரணமாக ஜனாதிபதி கடந்த சில நாள்களாகப் பல சந்திப்புக்களை ரத்துச் செய்ததால் அமைச்சர் மங்கள சமரவீரவினால் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரமுடியாமற் போயுள்ளது என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், இன்று ஜனாதிபதி குமார

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் இளவரசர் இன்று வருகை

கொழும்பு,பெப்.28

ஆஸ்திரேலியா உட்பட 4 நாடுகளுக்கான பயணத்தை ஆரம்பிக்கும் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இன்று இலங்கை வருகிறார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு இன்று காலை வந்து சேரும் அவர், சுமார் ஐந்து மணித்தியாலங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப் பாதுகாப்புத் தடை வலயம் வடக்கு-கிழக்கில் கட்டாயம் நடைமுறைக்கு

### அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

காத்தான்குடி,பெப்.28

கடற்கரையிலிருந்து 200 மீற்றர் தூரத்துக்கு கட்டடங்கள் அமைப்பதற்கு தடைவிதிக்கும் சட்டம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் தடை வலயத்தினுள் யாரும் குடியேறமுடியாது. மீறிச் செயற்படுவோர்கள் தடுக்கப்படுவார்கள். இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா மட்டக்களப்பில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை விசேட ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தை வந்தடைந்த அவர், மட்டக்களப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மேஜர் தயானந்தனின் வித்துடல் எள்ளங்குளத்தில் நேற்று விதைப்பு

கரவெட்டி,பெப்.28

சுகவீனம் காரணமாக கடந்த வெள்ளிக் கிழமை சாவடைந்த கடற்புலிகளின் வடமராட் சிப் பிரதேச நிதிப் பொறுப்பாளர் மேஜர் தயா னந்தனின் (சின்னராசா தங்கவடிவேல்) வித்து டல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலு மில்லத்தில் நேற்று விதைக்கப்பட்டது.

முன்னதாக வல்வெட்டித்துறை, மானாங் கானையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து நேற்றுக்காலை எடுத்துவரப்பட்ட வித்துடல் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் மக்க ளின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அஞ்சலி நிகழ்வு தமிழீழ மாவீரர் பணிமனை உதவிப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் நடை பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை யாழ்.மாவட்ட அர சியல்துறைத் துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை மாவீரர் மேஜர் தயானந்தனின் சகோதரர்கள் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மலரஞ்சலிகள் இடம்பெற்றன.

அஞ்சலியுரைகளை வடமராட்சி கடற்றொழி லாளர் சங்கத் தலைவர் எஸ்.தனபாலசிங்கம், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத் தைச் சேர்ந்த எஸ்.ஜெயகணேசன், கடற்புலி களின் மகளிர் அரசியல்துறையைச் சேர்ந்த பூரணி, கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து வித்துடல் நெடிய காடு, ஊறணி, பொலிகண்டி, சமரவாகு ஊடாக எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தைச் சென்றடைந்தது.

அங்கு மலரஞ்சலி, இறுதியுரை ஆகியன இடம்பெற்று பிற்பகல் 12.45 மணியளவில் வித்துடல் புனித குழியில் விதைக்கப்பட்டது.

(10-70)

# விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையவந்த சிறுமிகள் மூவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கரவெட்டி,பெப்.28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய வந்த 18 வயதுக்குட்பட்ட சிறுமியர் மூவர் நேற்று அவர்களுடைய பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை மற்றும் அல்வாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறுமியர்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் உள்ள விடுதலைப் புலி களின் அரசியற்துறை அலுவலகத்தில் இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பன், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பி னர்கள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட சிறுமியர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

(எ-70)





**சுகவீனம் காரணமாகச் சாவடைந்த மேஜர் தயானந்தனின் வித்துடலுக்கு முன்பாக அவரது தாயாரும் சகோதரி களும் கதறி அழுவதை முதல் படத்தி லும் அவரது வித்துடலுக்கு போராளி கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதை அடுத்துள்ள படத்தி லும் காணலாம்.**

***(படங்கள் : சி.சுந்தரலிங்கம், கர வெட்டிச் செய்தியாளர்)***

# பாடசாலை அனுமதிக்காக போலி ஆவணங்கள் சமர்ப்பித்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,பெப்.28

2005ஆம் ஆண்டிற்கான பாடசாலை அனு மதியின்போது போலி ஆவணங்களைச் சமர்ப் பித்த பெற்றோர்களுக்கு எதிராகச் சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம் ஒன்றுக்கான அனுமதியின்போது இடம்பெற்ற குளறுபடிகள் தொடர்பாகக் கிடைத்த முறைப்படுகள் குறித்து கல்வி அமைச்சு விசா ரணைகளை மேற்கொண்ட பின்னரே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படு கிறது.

131பாடசாலைகளில் இதுதொடர்பாக ஊழல் கள், மோசடிகள் என்பன இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து கல்வி அமைச்சருக்கு இது வரை 2500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன வாம்.

பாடசாலை அனுமதிக்காக 40 பாடசாலை களின் அதிபர்கள் பணம் அறவிட்டது தொடர் பாகவும் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

ஒரு சில கிராம சேவை உத்தியோகத்தர் கள் உட்பட அரச அதிகாரிகள் போலி ஆவ ணங்களைத் தயாரித்தார்கள் அல்லது அதற்கு ஒத்துழைத்தார்கள் என்ற தகவல்களும் கிடைத் துள்ளனவாம். அவை தொடர்பாக விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகிறது.

தமது பகுதிகளில் வசிக்கிறார்கள் எனப் போலிச் சான்றிதழ்களை வழங்கிய 5 கிராம சேவை உத்தியோகத்தர்கள் தொடர்பான விசா ரணைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் பணியாற்றும் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நூறுக்கும் அதிகமான கிராம சேவை உத்தியோகத்தர்கள் மீது இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதித் தேர்தல் ஆணையாளர்களின் இறப் பர் முத்திரைகள் பயன்படுத்தப்பட்டு போலிக் கையொப்பமிடப்பட்டு போலி ஆவணங்கள் தயா ரிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(10)

### பிரிட்டனுக்கான புதிய இலங்கைத் தூதர்

பிரிட்டனுக்கான இலங்கையின் புதிய தூது வராக திருமதி ஷேணுக்கா செனவிரட்ண நிய மிக்கப்பட்டுள்ளார்.

சுமார் 20 வருட காலம் இலங்கை வெளி நாட்டு ராஜதந்திர சேவையில் அனுபவம்கொண்ட திருமதி செனவிரட்ன பிரிட்டனுக்கான தூதுவ ராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் தூது வராவார்.

ஏற்கனவே இந்தப் பதவியில் கடமையாற் றிய பாயிஸ் முஸ்தபா ஓய்வுபெற்றதையடுத்தே செனவிரட்ண இந்த நியமனத்தைப் பெற்றுள் ளார்.

(க-10)

# தனியார் பஸ் உரிமையாளர்களிடம் கொழும்பில் கப்பம் பெற்ற பலர் கைது

கொழும்பு,பெப்.28

கொழும்பு புறக்கோட்டை தனியார் பஸ் நிலையத்தில் பஸ் உரிமையாளர்களிடம் நாளாந் தம் கப்பம் பெற்றுவரும் பாதாள உலகக் கும்பல் களைச் சேர்ந்த பலர் இரகசியப் பொலீஸா ரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை மற்றும் அதன் சுற்றுப் புறங் களில் தனியார் பஸ் தரிப்பிடங்களில் நீண்ட காலமாகக் கப்பம் பெற்றுவரும் நபர்கள் குறித் துப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டு வந்தது. எனினும், இதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் பொலீஸார் இருந்து வந்தனர்.

தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன இது தொடர் பாகப் பொலீஸ் மா அதிபரிடம் செய்த முறைப் பாட்டை அடுத்து விசேட பொலீஸ் பிரிவொன்று தனியார் பஸ் தரிப்பிடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டது. இந்தக் குழு கப்பம் பெறும் பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்த பல ரைக் கைதுசெய்துள்ளது.

குணசிங்கபுரப் பகுதியில் உள்ள பாதாள உலகக் குழுவைச் சார்ந்த நபர்களே இந்தக் கப்பம் பெறும் செயல்களில் ஈடுபட்டுவருகின் றனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கப்பம் பெற்று வருபவர்களின் விவரங்கள் பொலீஸாருக்குத் தெரிந்தபோதும் அதனைத் தடுத்துநிறுத்த முடியாத ஒரு நிலையே அங்கு நிலவுகிறது. காரணம் பிடிபடுபவர்கள் பிணை யில் வந்த மறுதினமே மீண்டும் கப்பம் வசூ லிக்க தொடங்கி வருகின்றனர் என்று பொலீ ஸார் கூறுகின்றனர்.

(க-10)

# ஆழிப்பேரலை பாதித்த மாணவருக்கு வழங்கவென சைக்கிள்கள், விளையாட்டு உபகரணங்கள்

## வட்டு. இந்து வாலிபர் சங்கம் கையளித்தது

வட்டுக்கோட்டை,பெப்.28

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடம ராட்சி, முல்லை. மாவட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கென வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் துவிச்சக்கர வண்டிகள் மற் றும் விளையாட்டு உபகரணங்களை யாழ் மாவட்ட மாணவர் அமைப்பிடம் கையளித்துள் ளது.

மாணவர்கள் சுனாமி அனர்த்தத்தினால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இவர் களின் மனோ நிலையில் மாற்றம் ஏற்படுவ தற்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பன வழங்கப்பட் டுள்ளன என இந்து வாலிபர் சங்க வட்டாரங் கள் தெரிவித்தன.

இந்து வாலிபர் சங்கத் தலைவர் சி.சிவ தரன் தலைமையில் சங்க கல்யாண மண்ட பத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா பொருள்களைப் பெறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட துணை அரசி யல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், செஞ் சொற்செல்வர் ஆறு. திருமுருகன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர் செ.கஜேந்திரன், சண்டிலிப்பாய் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, ஐ.நா. சபை உணவு விவசாயத் திட்ட ஆலோசகர் சு.திருஞானசம்பந்தர், அமெரிக்கப் பேராசிரியர் வேனாட் பற்றி, சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட வதிவிட பிரதி நிதி மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-161)

# ஜெனரேற்றர்கள் விநியோகித்த விவரம்: தமக்கு கிடைக்கவில்லை என்கிறது அமைச்சு

கொழும்பு,பெப்.28

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம் களில் தங்கியிருக்கும் மக்களுக்காக 569 ஜெனரேற்றர்கள் அரசினால் வழங்கப்பட்டன என்றும் -

ஆனால், அவை விநியோகிக்கப்பட்டது தொடர்பான விவரங்கள் இதுவரை தமது அமைச் சுக்குக் கிடைக்கவில்லை என புனர்வாழ்வு மற் றும் மீள்குடியமர்வு அமைச்சு தெரிவித்துள் ளது.

இந்த ஜெனரேற்றர்களில் யாழ் மாவட்டத் துக்கு 118, கிளிநொச்சி மாவட்டத்திற்கு 34, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 51 திருகோண மலை மாவட்டத்திற்கு 66, மட்டக்களப்பு மாவட் டத்திற்கு 70, அம்பாறை மாவட்டத்திற்கு 230 என மொத்தமாக 569 ஜெனரேற்றர்கள் விநியோ கிக்கப்பட்டனவாம்

ஆனால், இந்த ஜெனரேற்றர்கள் எந்தெந்த நலன்புரி முகாம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் இதுவரை சம்பந்தப்பட்ட அரச அதிபர்களால் தமக்கு அனுப்பிவைக்கப் படவில்லை என அந்த அமைச்சுத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் - திருகோணமலை மாவட் டத்திற்கு வழங்கப்பட்ட 66 ஜெனரேற்றர்களில் 12 ஜெனரேற்றர்கள் காணாமற் போய்விட்டன என செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(எ)





**சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி, முல்லைத்தீவு பிரதேச மாணவர்களுக்கு வட்டு. இந்து இளைஞர் மன்றம் சைக்கிள் கள், விளையாட்டு உபகரணங்களை அண் மையில் வழங்கியது.**

**இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் ஐ.நா. சபையின் உணவு, விவசாய ஆலோ சகர், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணாவிடம் சைக்கிள் ஒன்றைக் கையளிப்பதையும், இந்து இளை ஞர் சங்கத்தின் ஆஸ்திரேலிய கிளை உறுப் பினர் த.ஆதித்தன் மாணவர் அமைப்புப் பொறுப்பாளரிடம் விளையாட்டு உபகரணங் களைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.**

***(படங்கள் : வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# உரியதை வழங்காமல் இணக்கம் வராது

"இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பது குறித்த கேள்விக்கே இடமில்லை. அதைவிட முக்கியமான பிரச்சினைகள் குறித்து இப்போது கவனிக்க வேண்டியுள்ளது. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில்-அதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் - பல சிரமமான, சிக்கலான விடயங்கள் உள்ளன. ஆகவே, இது பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தருணம் அல்ல. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண, மீள் கட்டுமானப் பணிகளை அவசரமாக முன்னெடுக்கவேண்டிய வேளை இது என்பதை அரசும், புலிகளும் புரிந்துகொண்டுள்ளனர்."

- இப்படி புதுடில்லியில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் அறிவித்திருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

அவரது தகவலின்படி - அதுதான் யதார்த்த நிலைமையும் கூட -அமைதிப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகள் இல்லை.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறுவதில் அர்த்தம் உள்ளது. ஆனால், இதுவிடயத்தில் அவரது அரசு எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கின்றது என்பதுதான் கேள்வி.

ஏதோ அமைதிப் பேச்சுக்களை -சமாதான முயற்சிகளை - ஆரம்பிப்பதை விடுத்து - அவசர அவசரமாக அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமான முயற்சிகள் மும்முரமாக நடக்கின்றன என்பது போல புதுடில்லியில் ஒரு 'படம்' காட்டுகின்றார் கதிர்காமர்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண ஏற்பாடுகள் தொடர்பாக அவரது அரசு, தமிழர் தாயகத்துக்கு வெறும் வாய்ப்பேச்சால் 'கயிறு கொடுத்துக்கொண்டு' இருக்கிறதே தவிர, செயலில் ஏதும் செய்யவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து மாதங்கள் இரண்டு உருண்டோடி விட்டன. இப்பத்தியில் நாம் திருப்பித் திருப்பிச் சுட்டிக்காட்டியது போலத் தெற்கில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் மும்முரமாகத் தொடங்கின; நடைபெறுகின்றன. ஆனால், தமிழர் தாயகத்தில் அப்பணிகளை முன்னெடுப்பதற்கான - கொள்கையளவிலான - இணக்கம் கூட அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினர் இடையேயும் ஏற்படவில்லை.

தமிழர் தாயகத்தில் மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் புலிகளுடன் இணக்கமான ஏற்பாடு ஒன்றைச் செய்வது தொடர்பான விடயத்தில் அரசு கையாளும் வார்த்தைப் பிரயோகங்களே அரசின் உட்கிடக்கையை - நிலைப்பாட்டை - அம்பலப்படுத்தப் போதுமானதாகும்.

இந்த விடயத்தில் - ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு -அரசுடன் சேர்ந்து 'பொதுக்கட்டமைப்புப் பொறிமுறை' ஒன்றையே (Joint mechanism) தாங்கள் பிரேரித்திருக்கின்றார்கள் எனப் புலிகள் கூறி வருகின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளித்த புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முதல் புலிகள் தரப்பு சமாதான செயலகப் பிரதிநிதிகள் வரை அனைவரும் பொதுக்கட்டமைப்புப் பொறிமுறை பற்றியே பிரஸ்தாபிக்கின்றார்கள்.

ஆனால், அரசோ தனது தரப்பும், புலிகள் தரப்பும் ஒரு கட்டமைப்பில் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பை சொற்பிரயோகத்தில் தன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதுதான் நிலைமை.

அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்புக்களிலும், ஏனைய அரச ஆவணங்களிலும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளின் பகிரங்கப் பேச்சுக்கள், ஊடக அறிவிப்புக்கள் போன்றவற்றிலும் இந்தப் பொதுக் கட்டமைப்புக்கான பொறிமுறை என்ற சொல் பயன்படுத்தப்படுவதில்லை. வேறு வித அர்த்தத்தில் - அதற்குப் பதிலாக வேறு சொற்றொடர் - பயன்படுத்தப்படுகின்றது. அச்சொற்றொடர்கள் வெளிப்படுத்தும் அர்த்தம்தான் அரசின் நிலைப்பாடும் கூட.

அண்மையில் கொழும்பில் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம்மை ஜனாதிபதி குமாரதுங்க சந்தித்ததையொட்டி ஜனாதிபதி செயலகம் ஓர் உதித்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட்டது.

அதில் சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளைச் சமனாகப் பங்கீடு செய்வதற்காகப் புலிகளுடன் அரசு செயற்பாட்டு நடைமுறை (Working Arrangment) ஒன்றை ஸ்தாபிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளது என்பதை ஜனாதிபதி மீள உறுதிப்படுத்தினார் - என்றே உள்ளது.

புதுடில்லியில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இதே பாணியில்தான் சொற்பதங்களைக் கையாண்டுள்ளார்.

"அரசு - புலிகள் பிரதிநிதிகள் தமக்கிடையே, குறிப்பாக அரசுக்கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் (Uncleared Areas) புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகச் 'சாத்தியமான' செயற்பாட்டு நடைமுறைப்பொறிமுறை (Practical Working Mechanism) பற்றிப் பேசி வருகிறார்கள்" - என்று கதிர்காமர் கூறியுள்ளார்.

ஆகவே அனர்த்த நிவாரண மீள் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளுடன் ஒரு பொதுக் கட்டமைப்பு (Joint Mechanism) ஏற்பாட்டுக்கு வருவதற்கு அரசு இன்னும் தயாராகவில்லை ஆக புலிகளுடன் ஓர் செயற்பாட்டுநடைமுறைக்கு (Working Arrangment) ஏற்பாட்டுக்குவர மட்டுமே அரசு முயல்கிறது.

தமிழர்களின் ஏக அதிகார பூர்வ பிரதிநிதிகளும், தமிழர் தாயகத்தில் கணிசமான பிரதேசத்தைத் தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களுமான புலிகளுக்குரிய நிலையை - அந்தஸ்தை - பொறுப்பை - பங்களிப்பை - தர நிலையை - இடத்தை - அளிக்காமல் இது விடயத்தில் பொது ஏற்பாடு ஒன்றுக்கு வருவது சாத்தியமானதல்ல என்பதை அரசும், ஜனாதிபதியும் கதிர்காமர் போன்றோரும் உணர வேண்டும்.

புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதே நடைமுறைச் சாத்தியமான ஏற்பாடாகவும் இருக்கமுடியும் என்பதை அரசுத் தரப்பு புரிந்து கொள்ளட்டும்.

# தமிழ்ப் பாடசாலைகளை மீளமைக்கும் திட்ட வரைபடத்தில் பௌத்த கலாசாரம்!

## மகாசிவம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.28

இலங்கையில் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிந்த தமிழ்ப் பாடசாலைகளைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடம் பௌத்த சமயகலாசார அம்சங்களைக் கொண்டதாக இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் முற்றாக அழிந்த தமிழ்ப் பாடசாலைகள் புதிதாக வேறு இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளை புதிதாக நிர்மாணிப்பதற்காகக் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கும் திட்ட வரைபடங்கள் பௌத்த கலாசாரத்துக்குரியனவாக அமைந்துள்ளன என்றும்-

கல்வி அமைச்சு தயாரித்த இந்த திட்ட வரைபடம் மூலம் தமிழ்ப் பாடசாலைகள் புதிதாக நிர்மாணிக்கப்படக்கூடாது என்றும் -

தமிழ்க் கலாசாரத்துக்குரிய கட்டட வரை படம் மூலமே இப்பாடசாலைகள் நிர்மாணிக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சிடம் தாம் தெரிவித்துள்ளதாகவும் தற்போது அதற்குரிய வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-7)

அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது

## முதலில் வெளிநோயாளர் பிரிவு செயற்படும்

யாழ்ப்பாணம்,பெப்.28

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது.

இத்தகவலை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தெல்லிப்பழை வைத்தியசாலை கடந்த 90 ஆம் ஆண்டு முதல் அதன் சொந்த இடத்தில் செயற்படவில்லை. அது தற்காலிகமாக தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலையில் வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வந்தது.

இந்த வைத்தியசாலையைச் சொந்த இடத்தில் இயங்குவது தொடர்பாகப் பல தரப்பினரிடையேயும் மேற்கொள்ளப்பட்ட கலந்து ரையாடலின் பயனாகவே இந்த வெளி நோயாளர் பிரிவு புனரமைப்புச் செய்யப் பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி இயங்குவ தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - மேற்படி வைத்தியசாலையில் இயங்கிவந்த புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் இயக்கவுள்ளது. இப்பிரிவை இயங்குவதற்காக அப்பிரதேசங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்திற்காக கோபால்ட் இயந்திரசாதனங்கள். சிகிச்சை உபகரணங்கள் ஆகியன கனடாவில் இருந்து கொழும்பு வந்தடைந்துள்ளன. இவை அடுத்த சில தினங்களில் தெல்லிப்பழைக்கு எடுத்துவரப்பட்டு பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.(3-203)

## மாணவர்களின் பாடத்திட்டத்தில் 'வீதிப்பாதுகாப்பு' சேர்க்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.28

அடுத்த ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்துக்குள் வீதிப் பாதுகாப்பு எனும் விடயத்தையும் சேர்த்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய கல்வி நிறுவகமும், கல்வி அமைச்சும் மேற்கொண்டு வருகின்றன.

இது தொடர்பான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வீதிப்போக்குவரத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்தோர் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-13)

# கொழும்பு ஆனந்தா கல்லூரியில் அதிபருக்கு எதிராக 6 வழக்குகள்

## தரம் 1 அனுமதியில் முறைகேடாம்!

கொழும்பு,பெப்.28

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தரம் 1 இற்கான மாணவர்களை அனுமதித்தபோது அக்கல்லூரி அதிபர் முறைகேடாக நடந்துகொண்டார் என்று குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக இதுவரை 6 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் 3 வழக்குகள் தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

தேசியப் பாடசாலையான ஆனந்தாக் கல்லூரியில் தரம் 1 இற்கான அனுமதிக்கான அனைத்துத் தகைமைகளும் இருந்தபோதிலும் தங்களது பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனவும் குறைந்த தகைமைகளைக்கொண்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கல்லூரி அதிபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (கு)

இந்து மாணவர்கள் கோயிலுக்குச் செல்லட்டும்

# மாலை நேர வகுப்புக்களை வெள்ளிக்கிழமைகளில் நிறுத்துக

## தனியார் கல்வி நிறுவனங்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.28

இந்து மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் வழிபாடுசெய்ய ஆலயங்களுக்குச் செல்வதற்கு வசதியாகத் தென்மராட்சிப் பிரதேசத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேர வகுப்புகள் நடத்துவதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு மீசாலை சித்திர வேலாயுதர் இந்து மன்றத்தினர் தென்மராட்சி தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

தனியார் கல்வி நிறுவனங்களில் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும் மாலை வகுப்புகளை நிறுத்துவதன் மூலம் இந்து மத வளர்ச்சிக்குத் துணை புரிய முடியும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம், கட்டுப்பாடு, பக்தி போன்ற நற்பண்புகள் வளர்வதற்கு ஆலயவழிபாடு மிகவும் அவசியமானது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கு-203)

## மிருசுவில் தேவாலயத்தில் 46சிறார்கள் பராமரிப்பு

தென்மராட்சி,பெப்.28

சுனாமி ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியைச் சேர்ந்த 46 சிறார்கள் மிருசுவில் தேவாலயத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இச்சிறார்கள் மிருசுவில் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும்தெரிவிக்கப்பட்டது. (கு-117)

# திருமலை வைத்தியசாலையை புனரமைக்க இந்தியா உதவும்

திருகோணமலை,பெப்.28

சுனாமியால் பாதிக்கப்பட்ட திருகோணமலை பொது வைத்தியசாலையை நவீன வசதிகளுடன் புனரமைப்பதற்கு உதவிகளை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

நேற்றுத் திருகோணமலைக்குச் சென்றிருந்த இந்திய மத்திய அரசின் சுகாதார அமைச்சின் இணைச் செயலாளரான டாக்டர் திருமதி பவானி தியாகராஜன் தலைமையிலான குழுவினர் வைத்தியசாலைக்கும் சென்றனர்.

வைத்தியசாலைக்குக் கூடுதலான வசதிகளை ஏற்படுத்துவது குறித்து அக்குழு வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி ஞானகுணாளன், பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.ஏபிரகாம், அரச அதிபர் காமினி நொட்டிக்கோ ஆகியோருடன் கலந்துரையாடியது.

புதிய நோயாளர் விடுதிகள், புற்றுநோய், மனநல விடுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் -

ஆளணி வசதிகள், மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய நிதி வசதிகள் செய்து தரப்படவேண்டும் என்றும் - இந்தியக் குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கைகள் அடங்கிய விரிவான கருத்திட்ட அறிக்கை ஒன்றை அடுத்த 10 நாள்களுக்குள் தமக்குச் சமர்ப்பிக்கும்படியும் -

இலங்கையில் இந்தியா மேற்கொள்ளவிருக்கும் குறுகிய இடைக்கால, நீண்ட காலத்திட்டங்களில் இத்திட்டக் கருக்களும் சேர்க்கப்படும் என்றும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் வைத்தியத்துறை சார்ந்த பல திட்டங்களை இந்தியா நடைமுறைப் படுத்தவிருக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (3-151)

**நாளை**

மாசி 17
செவ்வாய்க்கிழமை
01.03.2005
திதி : பஞ்சமி
நண்பகல் 11.59 வரை
நட்சத்திரம் : சுவாதி
பிற்பகல் 5.30 வரை
சுபநேரம் : 10.57-12.27
ராகுகாலம் : [illegible]
[illegible]

**உதயவாக்கு**

குழந்தைப் பருவத்தில் வீட்டைவிட்டால் வேறு உலகம் இல்லை. பெற்றோரைத் தவிர வேறு தெய்வம் இல்லை. அந்த உலகம் சின்ன உலகம்தான். ஆனால் எவ்வளவு ஆனந்தமான உலகம்...!

காண்டேகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













யாழ்.மிற்ரவுண் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் 'அச்சாணி' சஞ்சிகை வெளியீடு வினாடிவினாப் போட்டி, வறிய மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டி வழங்கல் ஆகியன 'உதயன்' கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் ஈ.சரவணபவன், யாழ். மிற்ரவுண் றோட்டறக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.செல்வேந்திராவுக்கு சிறப்புப் பிரதியை வழங்குவதை முதலாவது படத்திலும் - பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் மற்றும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் - யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா வாழ்த்துரை வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மாணவன் ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்படுவதையும் வினாடி வினாப் போட்டி நடைபெறுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: தேவா)*

# பேரினவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பவர்கள் விடுதலைப் புலிகளே!

## கிழக்குப் பல்கலை. சமூகம் கோபி அனானுக்குக் கடிதம்

சிங்களப் பேரினவாதத்தின் ஆட்சியாளர்களிடமிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பவர்கள் விடுதலைப் புலிகள்தான்.

அத்தகைய விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்து கொள்கின்றனர் என ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவிக்கின்ற கருத்து கண்டனத்துக்குரியதாகும்.

- இவ்வாறு தெரிவித்து ஐ.நா. செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறது கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சிறுவர்களைக் கட்டாயமாகப் படையோடு ஆட்சேர்க்கும் நாடுகள், அமைப்புக்கள் பட்டியலில் உள்ளடக்க ஐ.நா. முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம். சிங்களப் பேரினவாதத்திடமிருந்தும், பேரினவாத அரசிடமிருந்தும் தமிழ மக்களைப் பாதுகாக்கக்கூடிய, அவர்களின் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாய் வாழ வழிசெய்யக்கூடிய ஒரே அமைப்பாக தமிழர்கள் விடுதலைப் புலிகளையே நம்பிக்கை கொள்கின்றனர். படைத்துறை ரீதியில் மிகப்பாரிய வெற்றிகளைப் பெற்றுத் தந்த விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தினது வேண்டுகோளுக்கு மதிபளித்து ஒரு யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப் படுத்தியதுடன் சமாதானத்துக்கான தமது முன் முயல்வை வெளிப்படுத்தினார்கள்.

பல்வேறுபட்ட உள்ளூர், சர்வதேச அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணி அவர்களின் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன் அதனை பல்வேறு ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியிலும் இதுவரை இறுகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் சிறிலங்கா அரசு பயங்கரவாதம் தன் படைத்துறையைக் கொண்டு ஏவிவிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் போது தமது தாய் தந்தையரைப் பலி கொடுதத இளைஞர்களை காப்பகங்கள் அமைத்து பாதுகாத்து பராமரித்தவர்கள் இவர்கள். இன்றும் இவ்வகையான காப்பகங்கள் பல சிறப்பாக இயங்கிவருகின்றன.

கடந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது புலிகள் மேற்கொண்ட மீட்பு நிவாரணப் பணிகளை சர்வதேச சமூகமே வியந்து பாராட்டி நினறது. அவ் அனர்த்தத்தில் உறவுகளைப் பறிகொடுத்த சிறுவர்களையும் அரவணைத்து பராமரிக்கும் பாரிய பணியையும் விடுதலைப் புலிகள் செய்து வருகின்றனர் மற்றும் விடுதலைப புலிகளுடன் சுயமாக இணைந்துகொண்ட சிறுவர்கள் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் யுனிசெப் ஊடாகவும், பொது அமைப்புக்கள் ஊடாகவும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கூட இவ்வாறு 23 சிறுவர்கள் கிளிநொச்சியில் பெற்றோரிடம் ஒப்படைக கப்பட்டனர். இன்று ஐ.நா. வெளியிட்டிருக்கும் ஆட்சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் பட்டியலில் உள்ள பெயருக்குரிய அநேகர் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பது எம்மால் காணமுடிகிறது. மாணவர்கள் தொழில் செய்பவர்கள், திருமணம செய்து குழந்தைகள் உள்ளவர்கள் கூட இப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலைமைகளில் பல சவால்களுக்கு மத்தியில் யுத்த நிறுத்தத்தை சீராகப் பேணியும், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கமுன் முயலுகளை மேற்கொண்டும் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப் பணிகளில காத்திரமாக ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள மீது இவ்வகையான ஆதாரமற்ற கருத்துக்கள் கண்டிக்கத்தக்கதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி விருதுக்கான தெரிவுக்குழு உறுப்பினர்கள் திடீரென ராஜினாமா

2004 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விருதுக்கான (சினிமா) தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் ஏழுபேரும் திடீரென ராஜினாமா செய்துள்ளனர்.

இதனால் விருதுவழங்கும் வைபவத்தை ஒழுங்கு செய்வதில் பெரும்சிக்கல்கள் உருவாகி உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. ராஜினாமாவற்கான காரணங்களை உறுப்பினர்கள் வெளிவிடாவிடினும் சிறந்த திரைப்படத்தைத் தெரிவு செய்வதில் உறுப்பினர்களிடையே இணக்கம் காணப்படவில்லை எனத் தெரியவருகிறது.

'சூரிய அரண்' என்ற திரைப்படத்தை சிறந்த படமாக ஒரு சில உறுப்பினர்கள் தெரிவு செய்தனர். ஆனால் அதை ஏற்காத ஏனைய உறுப்பினர்கள் 'மில்லே சொயா' என்ற திரைப்படத்தை சிறந்த படமாகத் தெரிவுசெய்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இழுபறியே தெரிவுக்குழு உறுப்பினர்களின் ராஜினாமாவுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் மகிழ்ச்சி காண்போம்

### தவக்காலச் சிந்தனை

### இருபதாம் நாள்

தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தின் பயணத்தில்...

இயேசு நாசரேத்தூர் தொழுகை கூடத்தில் கூடியிருந்தவர்களை நோக்கி "நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை" என்றார். (லூக்கஸ் 4:24) அவரின் சிந்தனையை நோக்கும்போது நூறுவீதம் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் ஒத்துப்போகின்றது.

கடவுள் அந்த மதத்திற்குச் சொந்தமானவர். எல்லார்க்கும் உரியவர்! இன, மொழி, மத பேதங்களுக்கப்பால்பட்டவர். அவர் ஆள் பார்த்துச் செயற்படுவதில்லை. அவருக்கு ஏற்புடையவர்களாக நாம் வாழ வேண்டும். குறிப்பாக, எல்லா இன மதததார்களுடனும் அன்பாகவும் நேர்மையாகவும் பழகவேண்டும். மற்றவர்கள் கடவுளை வழிபடுவதோ பாரம்பரியங்களை விசுவசிப்பதையோ தவறு என்றுரைத்தல் மடமைத்தனமாகும்.

மாறாக, மனிதத்தன்மை மனிதர்களை விட்டகலக் கூடாது. ஏனெனில், ஒவ்வொருவரின் உயிருக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கும் சக்திதான் இறைவன்.

உயிருள்ள இயற்கைகளில் எல்லாம் இறைவன் வாழ்கின்றார். எனவே, மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி காணும்போதுதான் மனங்கள் தூய்மை பெற்று, இன்பம் பெருகுவதோடு இறைவனும் மகிழ்ச்சியடைவார்.

**ஜோ.ஜெஸ்ரின்,** கொழும்புத்துறை.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 657 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 25-2-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5268964 - 5284163 |

லக்கினம் மகரம்

வெற்றி இலக்கங்கள்

**18 22 50 54**

ஜக்பொட் பரிசு
ரூபா.48,05,200/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
'ஜக்பொட் ரூபா. 55,58,450/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,37,332 | 10/- | 33,73,320/- |
| 2.இலக்கங்கள் | 30,934 | 20/- | 6,18,680/- |
| 1.இல + லக்கினம் | 30,676 | 30/- | 9,20,280/- |
| 2.இல + லக்கினம் | 2,851 | 100/- | 2,85,100/- |
| 3.இலக்கங்கள் | 821 | 500/- | 4,10,500/- |
| 3.இல + லக்கினம் | 81 | 5,000/- | 4,05,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 48,05,200/- | - |
| மொத்தம் | 4,02,704 | - | 74,65,130/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 74,65,130/-

தொடர் இல. 4318395 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5272088-2-88
5275800-4-06
5272105-1-48
5281561-3-48
5278157-1-93


## ஆசிரியர்களுக்கு ஒழுங்குமுறையில் பதவி உயர்வு

கொழும்பு,பெப்.28

ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 185,000 பேரில் 50 வீதமானவர்களுக்கு அவசரமாகவும் ஒழுங்குமுறையாகவும் பதவி உயர்வுகள் வழஙகுவதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடுகள் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பான திட்டமொன்றுக்கமைய பதவி உயர்வுகள் பெறாமல் இருந்துவரும் ஆசிரியர்கள் இதனால் பயனடைவார்கள் என்று தெரியவருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆசிரியப் பயிற்சி பெறும பட்டதாரிகள், நிரந்தர பட்டதாரி ஆசிரியர் பட்டியலுக்குள் ஈர்க்கப்படுவார்கள். இவ்வாறு பதவி உயர்வு வழங்கும்போது பயிற்சிக் காலத்தையும் கவனமாக பரிசீலிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

2004-12-31 திகதிக்கு முன் நியமனம் பெறற மௌலவி பயிலுநர்கள் மற்றும் அவ்வாறான தரஙகளில் நியமனம் பெற்றவர்கள் உள்ளீட்பு நடைமுறைகளின் படி பயிற்சி பெறாத ஆசிரியர்கள் தரங்களில் உள்ளீர்க்கப்படுவர்.

1994-10-6 ஆம் திகதிக்கு முன் நிரந்தர சேவைகளான நியமனம் பெற்றவர்கள் மற்றும் அதற்கு முன்பட்டம் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் சேவையில், சேவையில் அமரும் திகதியிலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுபவர். அந்தக் காலகட்டம் பட்டதாரி ஆசிரியர் சேவைக் காலமாக பதவி உயர்வின்போது கணிக்கப்படும்.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இத்தகவல் வெளியாகியுள்ளது.(ப)


### வீடு விற்பனைக்கு

ஏழாலை மத்தியில் 4 பரப்புக் காணியுடன் வீடு (43X27) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 [illegible]


## மரண அறிவித்தல்கள்

### கந்தர் சொக்கலிங்கம்



மாகியம்பதி வடக்கு, சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரான கந்தர் சொக்கலிங்கம் அவர்கள் (25-02-2005)வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் குலசிங்கம், தம்பிராசா (இத்தாலி), தங்கராசா, காலஞ்சென்ற இராசமலர், இரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் சுகுமார் (மோகன் - இத்தாலி), சுகுமாரி, விஜயகுமாரி (ஜேர்மனி), வசந்தகுமாரி (கனடா), உதயகுமார் (இத்தாலி), ரூபகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் விஜயமாலா (இத்தாலி), செல்வராசா, ரவீந்திரன் (ஜேர்மனி), பாபு (பத்மசீலன் - கனடா), திருமகள் (இத்தாலி), சுரேஜினி ஆகியோரின அருமை மாமனாரும் ரிருஜன், ரிருஜா, பிராசாத், அபர்ணா, சுபர்ணா, ரஜீவன், பானுஜா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01-03-2005) செவ்வாய்க் கிழமை பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாகியம்பதி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரூபன் (மகன்)

*மாகியம்பதி, சண்டிலிப்பாய்.* (42559)(46)

### சரவணமுத்து ஜெயரட்ணம்



யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் சுவிறஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஜெயரட்ணம் அவர்கள் 22.05.2005 செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி சரவணமுத்து -சரஸ்வதியின் அன்பு மகனும் அமரர் நல்லசிவன் மற்றும் பகவதியின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் (சுவிஸ்) அன்புக் கணவரும் ஜெயாழினி, ஜெயாழன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் குணரட்ணம் மற்றும் விஜயரட்ணம், கிருஸ்ணவேணி, பத்மலோஜினி (பிரான்ஸ்), சுலோஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோ, பத்மநாதன், அமரர் சிறிகரன், திருமால் (பிரான்ஸ்), கணேசு, விஜயன், தம்பிராஜா, பாலசுப்பிரமணியம், சந்திரசேகரன் தவராணி (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரேவதி, புவனேஸ்வரி, சாந்தி, நகுலா, விஜயகுமாரி, மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2005) திங்கட் கிழமை மாலை 6 மணியளவில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பத்மநாதன் (காந்தி - மைத்துனர்)
விஜயரட்ணம் (சகோதரன்)

*29/2, கடைச்சுவாமி லேன் நீராவியடி, யாழ்ப்பாணம்.* (42558)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் கிடைத்தது முதற்கொண்டு தமிழனுக்கு அவலமான வாழ்வே

## சிவனேசன் எம்.பி. கூறுகிறார்

வலி.வடக்கு,பெப்.28

இலங்கை சுதந்திரம் அடைந்து 57 வருடங்கள் ஆகின்ற போதிலும் சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழன் சுதந்திரமாக நடமாட முடியாமலும் சுதந்திரமாகத் தொழிலைச் செய்ய முடியாமலும் சொந்த நிலத்தில் வாழமுடியாமலும் அவலமான வாழ்வு வாழும் நிலைக்கே இட்டுச்செல்லப்பட்டுள்ளான்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவனேசன் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திரதின எதிர்ப்பு நலன் போராட்டம் தெல்லிப்பழைப் பிரதேச செயலக முன்றிலில் வலி. வடக்குப் பொது அமைப்புகள் ஒன்றியத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன்:-

வாழ்வியல் உரிமை, தொழில் செய்யும் உரிமை, நடமாடும் உரிமை ஆகிய அனைத்தும் சிங்களப் பேரினவாதத்தால் பறிக்கப்பட்டு சுதந்திரம் அற்றவர்களாகவே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இன்றைய சுதந்திரம் என்பது சிங்கள மக்களுக்குரியதே அன்றி தமிழ் மக்களுக்கு உரியது அல்ல.



எமது வாழ்விடங்களையும் தொழில் செய்யும் நிலங்களையும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக நாம் பல்வேறு அவலங்களுக்கு உள்ளாகியுள்ளோம். இத்தகைய நிலைமையை சிங்கள தேசமோ அன்றி, சர்வதேசமோகூட அக்கறையுடன் திரும்பிப்பார்க்கவில்லை. உண்மையான தமிழ் மக்களின் பிரச்சினையையும் கூடப் பார்க்க முன்வரவில்லை.

நாம் வாழவேண்டும் என்பதற்காகவே பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டு வருகின்றோம்; போராடுகின்றோம். எமது நிலம் என்று விடுதலை பெறுகின்றதோ அன்றே நாம் சுதந்திரமாக வாழலாம். தொழிலைச் செய்யவும், நடமாடவும் முடியும்.

தமிழ் மக்கள் பற்றியோ அன்றி அவர்களின் வாழ்வியலுக்கான சுதந்திரம் பற்றியோ சிங்கள தேசம் சிந்திக்கவில்லை. எமது சுதந்திரம் கிடைக்கும் வரை நாம் சாத்வீக வழியிலும் ஏன ஆயுத வழியிலும்கூடப் போராட வேண்டியது அத்தியாவசியமாகும். இந்தவகையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராகப் பல்வேறு வகையான போராட்டங்களையும் நடத்த வேண்டும் என்றார். (ப-86)

## தனியார் சிற்றூர்தி சங்கத்தினர்

# பிரயாணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும்

வலி. வடக்கு,பெப்.28



வடக்கு - கிழக்கு மாகாணசபை முழுமையான முறையில் இயங்காத நிலையிலேயே நான் யாழ். மாவட்ட தேசிய போக்குவரத்துக் ஆணைக் குழுவின் தலைவராக அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளேன். தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் குறைந்த கட்டணத்தில் பிரயாணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திச் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும்.

மேற்கண்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொண்டார்.

சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்தில் தனியார் சிற்றூர்தி வண்டிகள் நிறுத்துவதற்காக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி சு.சொக்கலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் க.கணேஷ்:-

யாழ். மாட்ட சிற்றூர்திச் சேவை நல்ல முறையில் இடம்பெறவேண்டும் என்பதற்காகத் தரிப்பிடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முக்கிய நோக்கம் குறைந்த கட்டணத்தில் வசதியான நல்ல சேவையை மக்களுக்குக் கொடுப்பதாகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதிநிதிகளாக மக்களும் நீங்களும் இருக்கின்றீர்கள். நல்ல போக்குவரத்துச் சேவையை நீங்கள் மக்களுக்கு வழங்கவேண்டும். அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு என்னுடையதாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இலங்கை தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரெட்ணா கூறியதாவது:-

இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் தனியார் சிற்றூர்திச் சேவையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்த நிலைமைக்குக் காரணம் தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் தலைமையும் நிர்வாகத்தினரின் சிறந்த நடவடிக்கையுமே காரணம் ஆகும். இதனை நாம் இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நேரில் கண்ட அனுபவத்தில் இருந்தே இதனைக் கூறுகின்றேன்.

எதிர்காலத்தில் சிற்றூர்திச் சேவையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கென பல்வேறு நலன்களைப் பேணும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இந்த வகையில் சங்கத்திற்குக் கிடைக்கும் வருமானத்தில் 25 வீதத்தை இத்தகைய செயற்பாட்டிற்கு பயன்படுத்தவுள்ளோம். இந்த நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட சிற்றூர்திச் சங்கமும்கூட ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார்கள்.

இத்தகைய செயற்பாட்டினை யாழ். குடாநாட்டில் மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுகளும் அரச அதிபரும் மற்றும் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரும் உதவி புரியவேண்டும். எதிர்காலத்தில் பொதுவான வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

இதற்குப் பதிலாக சிற்றூர்திகள் எந்த வழியில் சேவையாற்றவுள்ளனரோ அந்த வழிகளுக்கே அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளன. தனியார்கள் சிற்றூர்திகளைக் கொள்வனவு செய்வதற்குக் கடன்களைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை அடைகின்றார்கள். ஆனால், சங்கங்கள் ஊடாக கடன்களை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் - என்றார்.

யாழ். மாவட்டப் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் உரையாற்றும் போது:-

யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக தனியார் சிற்றூர்திகள் தரித்துச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கட்டடம் இதுவாகும். இக்கட்டடத்திற்கு அத்திபாரம் போட்ட நாள், வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாது.

இந்தக் கட்டடத்திற்கு அத்திபாரம் போடப்பட்டபோதே யாழ். குடாநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைச் சுனாமி கடல் அனர்த்தம் காவுகொண்டுள்ளது.

தனியார் சிற்றூர்திச் சேவையினர் பொது மக்களுக்கு நல்லமுறையில் சேவைகளை வழங்குவார்களாக இருந்தால் மேலும் பல இத்தகைய தரிப்பிடங்களை அமைக்க முடியும். தனியார் சிற்றூர்திச் சேவையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

மக்கள் தனியார் சிற்றூர்திச் சேவையில் பயணஞ்செய்வது வசதியானதும் பாதுகாப்பு நிறைந்ததும் என்று கருதும் நிலைமையை உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு சிற்றூர்திச் சங்கத்தினதும் சிற்றூர்தி உரிமையாளர்களினதும் கடமையாகும் எனவும் குறிப்பிட்டார். (ப-86)




# சாரணியத்தில் ஈடுபடும் மாணவர்கள் ஒழுக்கக் கட்டுப்பாட்டை பழகிக்கொள்வர்

சாரணியச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்களாக வளர்ந்து வருகின்றார்கள்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆசிரியர்களுக்கான அவத்தை இரண்டு வதிவிடப் பயிற்சி நெறியின் இறுதிநாள் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.ஜெகநாதன் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

இச்சாரணர் வதிவிடப் பயிற்சி நெறியில் பருத்தித்துறை மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர், குருளைச் சாரணர் தலைவர்கள் முப்பதைந்து பேர் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் பயிற்சி உதவி ஆணையாளர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் எஸ். ஜெகநாதன் தொடர்ந்து தமது உரையில்:-

சாரணியம ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடைய அமைப்பாக உள்ளது. இதில் சேர்ந்து பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்களாக தம்மை அமைத்துக் கொள்கிறார்கள். ஆபத்து வேளைகளில் மற்றவர்களுக்கு உதவுதல் மூலம் மற்றவர்களுடன் விட்டுக்கொடுத்து பழகும் தன்மையை அவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள். சாரணர் பயிற்சி மூலம் சிறந்ததோர் பரம்பரை உருவாகி வருகிறது.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் சாரணியம் உருவாக்கப்படவேண்டும். அதிபர்கள் மனம் வைத்தால் எல்லாப் பாடசாலைகளிலும் சாரணர்களை உருவாக்கி சமூகத்துக்கான சிறந்த பிரஜைகளாக மாணவர்களை மாற்றமுடியும். இனிவரும் காலத்திலாவது இந்த நல்ல காரியம் ஏற்படவேண்டும் என்பது எம்மைப் போல உதவி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆணையாளர்களாக வளர்ந்து வரவேண்டும் - எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சாரணர்உதவி ஆணையாளர் க.தவகோபால், உதவி மாவட்ட ஆணையாளர் க.சிவகடாட்சம் மற்றும் பயிற்சி ஆசிரியர் எஸ்.சிறி ஆகியோர்களும் கலந்துகொண்டனர். (ப-51)

# முறைசாராக் கல்வியை முழுமையாகப் பெற்றால் நிரந்தர வருமானத்துக்கு வழிபிறக்கும்

## கண்காட்சியில் கல்விப்பணிப்பாளர்

உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கவென முறைசாராக் கல்விப் பிரிவு தொடங்கப்பட்டது. இந்தப் பயிற்சியினை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் ஒரு நிரந்தர வருமானம் பெறும் நிலைக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

ஏட்டுக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாணவர்கள் தொழிற்பயிற்சியினைப் பெற பின்னடித்து வருவது வேதனைக்குரியது.

தொழிற்பயிற்சியினை வலயக்கல்வி அலுவலகம் பொறுப்பெடுத்துச் செய்கின்ற போதிலும் மாணவர்கள் இந்தக் கல்வியினை பெறத் தயக்கம் காட்டுகின்றனர்.

- இவ்வாறு வரணி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா உரையாற்றும்போது தெரிவித்தார்.

வலயக் கல்வி அலுவலக முறைசாராப் பிரிவின் உதிவிக் கல்விப்பணிப்பாளர் தா.பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றுகையில் -

மாணவர்களுக்கு முறைசாராத் திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி வழங்குவதன் நோக்கம் எதிர்காலத்தில் அவர்கள் ஒரு நிரந்தர வருமானத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே தொழிற்பயிற்சி பெறுவதால் கிடைக்கும் நன்மைகளை முழுமையாக அறியாததால் பயிற்சியினை சிலர் இடைநடுவில் நிறுத்திவிடுகிறார்கள்.

ஆனால், முழுமையாக பயிற்சியினைப் பெறுவோர் நமது நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் தாம்பெற்ற பயிற்சியினால் சிறந்த வருமானம் பெறும் நிலையில் உள்ளதை காணமுடிகிறது.

சர்வதேச நாடுகளிலுள்ள பாடசாலைகளில் தொழிற்கல்விக்கு மாணவர்கள் பரீட்சைகள் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றனர். ஆனால், இங்கு அவ்வாறான நிலை இல்லாதபோதிலும் மாணவர்கள் இப்பயிற்சியினைப் பெறத் தயக்கம் காட்டுகின்றனர். பயிற்சிபெறும் மாணவர்கள் பெற்ற பயிற்சியினை உரியமுறையில் பயன்படுத்தி வழிகாட்ட[illegible] மகா வித்தியால[illegible] உட்படப் பலர் உரையாற்றினர். (ப-117)

# எமது ஒற்றுமையை உடைக்க சில சக்திகள் முயல்கின்றன

## நல்லூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் எச்சரிக்கை

நல்லூர்,பெப்.28

எமது ஒற்றுமையை உடைக்கவும் எமக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தவும் சில சக்திகள் முயற்சி செய்கின்றன என்று நல்லூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்களின் சங்கங்களை ஒருங்கிணைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாவலர் மண்டபத்தில் க.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து பேசும்போது செழியன் கூறியதாவது:-

அரச திணைக்களங்களின் செயற்பாடுகளை நாங்கள் கண்காணித்து வருகின்றோம். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய கடப்பாடு எமக்குண்டு என்பதால், நாங்கள் இதுவிடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்.

சுனாமி அனர்த்தத்தின்போது ஒருசில நிமிடங்களில் சிறப்புச் செயலணிகளை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தாமதமின்றி வழங்கக்கூடியதான கட்டமைப்பைத் தலைவர் செயற்படுத்தியதை சர்வதேச சமூகம் ஒப்புக்கொண்டுள்ளது.

எமது ஒற்றுமையை உடைக்கவும் சிதறடிக்கவும் எம்மிடையே பிரிவினைகளை ஏற்படுத்தவும், எம்மிடையே உள்ள சில சக்திகள் முயல்கின்றன.

### நட்டமில்லாத கூட்டுறவுச்சங்கம்

இலங்கையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நட்டம் இன்றி இயங்கிய ஒரேயொரு கூட்டுறவுச் சங்கம் வன்னியிலேயே இருந்தது என்பதை திருமலையைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். எம்மைப் பிரிக்கமுயலும் சக்திகள் இருக்கிறார்களேயன்றி ஒன்றிணைக்க ஒருவரும் இல்லை. இதற்கு எதிராக நம்மை ஒன்றிணைக்கும் முயற்சியில் செயற்படவேண்டியுள்ளது.

இரண்டு, மூன்று சங்கங்களாகப் பிரிந்திருபதால், பேக்கரி உரிமையாளர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியதுடன் நட்டங்களையும் சந்திக்கவேண்டியிருக்கின்றது.

இந்த நிலை மாறி மக்களுக்குச் சீரான விநியோகத்தை நல்லமுறையில் வழங்கக் கூடியதாக ஒருங்கிணைந்த அமைப்பே தேவை. இன்று ஒன்றிணையும் நீங்கள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் தேவையான உதவிகளை வழங்குவோம் - என்றார்.

(ப-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயம், றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், உடுப்புகள், மண்எண்ணெய்க்குக்கர் ஆகியவற்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-204)


## விற்பனையாகிறது

பேராசிரியர் ஞான குமாரனின் மெய்யியல் நூல் வெளிவாரி கலைப் பட்டதாரிகளுக்குரியது.

கிடைக்குமிடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ் .வீதி.
யாழ்ப்பாணம்.
(சி.41194)(46)


# அரியாலை கமநல சேவை அலுவலகத்தில் கால்நடை வைத்திய சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.28

கோண்டாவிலில் இயங்கும் கால்நடை வைத்திய நிலையத்தின் உப அலுவலகம் ஒன்று அரியாலை கமநல சேவை உப அலுவலகத்தில் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4மணிவரை இயங்கவுள்ளது.

இந்நிலையத்தில் கால்நடைகளுக்கான விரிவாக்கல். வைத்தியம், பூச்சித்தடுப்பு, நோய்த்தாக்கம் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்படும் எனவும்-

இப் பிரதேச மக்கள் மேற்படி இரண்டு தினங்களிலும் தமது தேவைகளைச சிரமமின்றி நிறைவுசெய்து கொள்ளமுடியும் என்று கோண்டாவில் கால் நடை வைத்தியர் அறிவித்துள்ளார். (எ-203)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி யோ.சிவபாலன் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை
அவர்களது மறைவு வேதனைக்குரியது

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை, அல்வாய். (சி.41212)(46) பாடசாலைச் சமூகத்தினர்.

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121,2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2459 (41823)





Motherboard Supports
Intel: Prescott/HT, P4, Celeron
AMD: Duron, Athlon, Sempron

ஆசியா-பசிபிக்கில் 70% சந்தையைக் கொண்டுள்ளது
இந்தியாவின் 1ஆவது மதர் போர்ட்
இலங்கை முழுவதும் பரந்த 266 முகவர் சந்தை நிலையங்களில் பராமரிப்புடன் விற்பனை

சிறப்பு தொழில்நுட்பங்கள்
- FSB 400/533/800 MHZ
- DDR 400MHz max - 3Gb Support
- 32/64 MB onboard VGA
- 2 MB Flash Bios

மேலதிக தொழில்நுட்பங்கள்
- Intel/VIA/SIS Chipsets
- 6 channel Audio
- SATA / CNR USB Connectors

Dealer inquiries welcome. Tel: 077 213 6712

MICRO PC SYSTEMS

யாழ்ப்பாணம் | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா | கொழும்பு - 06 | கொழும்பு - 13

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686



An Indian Leading Enterprise in Computer & Electronics has Introduced their marvellous Technology in Jaffna along with their team

All of our Engineers are well Qualified & experienced

* All with 3 years immediate Replacement warranty

The only centre for motivated designs in Computer Hardware

முழு டிஸ் அன்டெனா செட் 12999/- முதல்

OUR SPECIAL PACKAGES

Compaq PIII
550, 600, 733, 800, 1GHz
128 SDRAM,10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor, Keyboard, Mouse
Rs. 32,000/- முதல்

Intel PIV
128 SDRAM,40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, ATX Tower with Front USB & Audio, 15" color Monitor, Keyboard, Mouse
Rs. 48,900/- முதல்

Proud be An Indian Technology at Jaffna

Knowledge beyond the technology. That's CeSCO

பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட யப்பான் டெலிவிசன்கள் மற்றும் ஓடியோ வீடியோ சாதனங்கள்

டிஸ் எல்என்பி மற்றும் ரிசீவர்

Institutions, Schools & Dealers க்கு விசேட சலுகைகள் உண்டு

Our New introduction Special Satellite Channel interfaces with Computer

தரம் தாராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

CeSCO
56/15, Stanly Road, Jaffna.
(Behind Bank of Ceylon)


# சருகு புலி பிடிபட்டது

தென்மராட்சி,பெப்.28

மீசாலை கிழக்குப் பகுதியில் கால் நடை மற்றும் கோழி வளர்ப்போருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்துவந்த சருகு புலி கடந்த 24 ஆம் திகதி இரவு பிடிக்கப்பட்டது.

கோழிக் கூடொன்றில் உட்புகுந்த இந்தச் சருகு புலி கூட்டினுள் வைத்துப் பிடிக்கப்பட்டது.

13½ கிலோ நிறையுடைய இந்தச் சருகு புலி தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டது. (117)


11ஆவது ஆண்டில்
பூநகரி நகரில்.....

01-03-2005 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

வைப்புத் திட்டங்கள் — கடன் திட்டங்கள்

தேட்ட வைப்புக்கள்
நிலையான வைப்புக்கள்

தமிழீழ வைப்பகம்

மேலும் பல பணிகள்

தங்க அடைவுக் கடன்
ஏனைய கடன் வாய்ப்புகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்.

(C/41206) (26)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பாடத்திட்டத்துடன் மட்டுமே முடங்கிப்போய்க் கிடக்கும் பரிதாபநிலை

**கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு இது. இதன் முதற்பகுதி கடந்த 25ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தது.**

கல்லூரிகளின் பிரதான கடமைகளுள் இரண்டாவது விடயமான சமுதாயப் பணியினாலும் மாணவர்களூடாகவும் சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி, சமுதாயத்தை மாற்றியமைத்தல் என்பதும் இன்றைய நிகழ்ச்சியில் நான் கலந்துகொள்ள விரும்பியதற்கு ஒரு காரணமாகும்.

ஏனெனில், நான் உயர் கல்வி கற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக இருந்த பிக்னல் அவர்கள் மனித கௌரவத்துக்கும் சமூக நீதிக்கும் மதிப்பளித்து தாழ்த்தப்பட்டவர்களைக் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் யாழ்ப்பாணக் கல்லூரியில் அனுமதித்து, சரித்திரம் படைத்ததுபோல, யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கிய முதலாவது இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெருமை உங்கள் கல்லூரிக்கே உரியது என்பதனாலாகும். இப்பெருமையைப் பெற்றுத் தந்த உங்கள் கல்லூரியின் புகழ் பூத்த அதிபரான ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள், அக்காலத்தில் தரம் குறைந்த - வயது குறைந்த - மாணவர்களையும் ஏனைய கல்லூரிகள் ஏற்க மறுப்பவர்களையும் உங்கள கல்லூரியில் அனுமதித்தது பற்றி அவரிடம் ஓர் அன்பர் கேட்டதற்கு, "இத்தகைய மாணவர்களை அனுமதிப்பதனால் இந்தக் கல்லூரியை மட்டுமே சிலவேளை அவர்களால் சீர்குலைக்க முடியும். ஆனால், இவர்களை வெளியே விட்டால் முழு சமுதாயமுமல்லவா அழிந்துவிடும். இங்கு நான் இருக்கும் வரை இக்கல்லூரியை எவராலும் சீர்குலைத்து விடமுடியாது" என மிக அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்து, தான் ஒரு புரட்சிகரமான சிந்தனையாளர் என்பதை வெளிப்படுத்தினார். அவரது தூய செயற்பாடு கல்லூரிகள் சமுதாயப் பணியினாலும் மாணவர்களூடாகவும் சமுதாயத்தில் காணப்படும் சீரழிவுகளைச் சீராக்க எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கிறது.

கல்லூரிகளின் கடமைகளில் மூன்றாவதாகக் குறிப்பிட்ட 'விரைந்து மாற்றமுறும் சமுதாயத்தில் வாழ மாணவர்களை ஆயத்தமாக்குதல்' என்ற விடயத்தை ஆராயும்போது, உங்கள் அதிபர் வகுத்துள்ள வரவேற்கத்தக்க நடவடிக்கைகளுடன் வேறு சில விடயங்களையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்று உலகம் ஒரு மயமாகலை நோக்கி விரைவாகப் பயணித்துக் கொண்டிருக்கும்போது, தனி மனித சுதந்திரத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் அபாயம் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

அமெரிக்க கல்லூரிகளில் காணப்படும் நூல் திரட்டுகளில் (Anthology) நாளைய உலகம் எவ்வாறு இருக்கலாம் என்பது பற்றிய கதைகள் "MANY TOMORROWS" என்ற தலையங்கத்தில் பயன்படுத்தப்படுகின்றன. கட்டுப்பாட்டுககுட்படுத்திய வாழ்க்கை முறையிலுள்ள அபாயங்களை (The dangers of regimented life) எதிர்கொள்ளக்கூடிய வகையில் அமெரிக்கக் கல்லூரிகளில் மாணவர்கள் தயார்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு எமது மாணவர்களையும் தயார்ப்படுத்துவது இன்றியமையாதது.

மாணவர்களே! நாங்கள் மகிழ்ச்சியாக எப்போதும் இருக்கவேண்டும். ஆனால், உங்கள் மகிழ்ச்சி மற்றவர்களைப் புண்படுத்தக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் சகோதரர் போல் மற்ற மாணவர்களை நினைக்கவேண்டும். இயன்றவரை உதவி செய்யவும், சேர்ந்து அனைவரும் மகிழவும் பழகிக்கொள்ள வேண்டும்.

## மூன்றில் இரண்டு பங்கு நேரத்தை படிப்பில் செலவிடுகின்ற நிர்ப்பந்தம்

### விளையாடி விளையாடிப் படித்து மனிதரானோம்

இன்றைய மாணவர் சமுதாயத்தைப் பார்க்கும்போது பல வேளைகளிலும் பரிதாபப்படாமல் என்னால் இருக்கமுடியவில்லை. அன்று நாம் கற்றபோது கல்லூரி அளித்த பற்பல அரிய வாய்ப்புக்களையெல்லாம் நன்றாகப் பயன்படுத்தப் போதியளவு நேர அவகாசம் இருந்தது. மன மகிழ்வோடு சுமை தெரியாமல் விளையாடி, விளையாடிப் படித்தோம்; மனிதரானோம்.

ஆனால், இன்றோ உயர் வகுப்பு மாணவர் வேறு துறைகளில் ஈடுபடமுடியாமல் தம் பாடத்துடன் மட்டுமே முடங்கிக் கிடந்துபாடுகள் படுவதை அவதானிக்க முடிகிறது. மூன்றில் இரண்டு பங்கு நேரத்தை தினமும் படிப்பில் செலவிடுகிறார்கள் என ஓர் அறிக்கையில் சமீபத்தில் வாசித்தேன். பல் கலைக்கழகப் பிரவேசப் போட்டிகளும் வெட்டுப்புள்ளிகளும் வருடா வருடம் அதிகரிக்கும் போது மாணவர்களின் சுமையும் பன்மடங்கு பெருகிக்கொண்டே போகிறது. இந்த நிலையில், செய்தித்தாள்கள் தானும் வாசிக்க நேரமில்லாமல் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறதென்றே அறிய முடியாமல் ஊன் உறக்கமின்றி விழுந்து விழுந்து படிக்கவும் கல்வி நிலையங்களுக்கு மாறி மாறி ஓடவும் வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கு ஏற்பட்ட இந்த நிலைமையின் தாக்கம் என்ன என்பதை ஆராய்ந்தால், கல்வி வர்த்தகமயமாக்கப்பட்டு, தனியார் கல்வி நிலையங்கள் பெருகி, கல்லூரி ஆசிரியர்களின் கட்டுப்பாட்டுக்கும் செல்வாக்குக்கும் தூரவே மாணவர்கள் சென்றுவிட்டனர். இதனால், மாணவர்களிடையே ஒழுக்கமின்மை அதிகரித்து வருகிறது. அறுபதாம் ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர்கள் அறிவிலும் ஆளுமையிலும் மதித்துப் போற்றப்பட்டு



சமூகத் தலைவர்களாகக் கணிக்கபபட்டார்கள். ஆசிரியர்கள் அன்று மாணவர்கள் மத்தியில் அதியுயர் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணுவதில் முக்கிய பங்காற்றினார்கள். அதற்குப் பெற்றோரும் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

மனிதன் மாற மாற அவன் சந்ததிகள் பெருகப் பெருக அவனது நாகரிகமும் மாறிக் கொண்டு செல்கின்றது. காலத்துக்கு ஏற்ப கோலமும் தேவைகளும் மாறுவது இயல்பாயினும், காலத்தின் தேவையையொட்டி நாம் காத்து வந்த - ஏற்று வந்த - நாகரிக உலகங்கள் யாவும் உயர்ந்து போற்றிய விழுமியங்களை விட்டு நாம் விலகவிடலாகாது. மேலைத்தேயம், கீழைத்தேயம் என்ற வேறுபாடு எமது சமுதாயத்திற்கே உரிய தனித்துவமான விழுமியங்களிலேயே தங்கியிருந்தது. சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஸ்ணன் என்ற இந்திய

**இ.த. விக்னராஜா**
**யாழ்.மாவட்ட நீதிபதி**

தத்துவ மேதை கல்வியில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய விழுமியங்களுக்குப் புதுமெருகூட்டுதல் அவசியமெனக் குறிப்பிட்டுள்ளமையை நாம் அவதானிக்க வேண்டும்.

### இயந்திரக் கலாசாரம்

இந்த நூற்றாண்டில் கணனி மயமாக்கப்பட்டுவரும் ஒரு புதிய உலகில் நாம் பயணித்துக்கொண்டிருக்கிறோம். மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியதும் கல்வியூடாகக் கற்க வேண்டியதுமான ஒழுக்க நெறிகள் எண்ணில் அடங்காது. எங்கு நோக்கினாலும் ஒரே இயந்திரக் கலாசாரம். இந்நிலையில் மனித வாழ்வுக்கு அவசியமான அவசரமான விழுமியக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கலைத் திட்டத்தினூடாக அதனை நடைமுறைப்படுத்தல் அவசியமாகிறது. செயல் விளைவுகள் வழியாகவும், தக்க நெறி ஊடாகவும் கலைத் திட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிக் கல்வியே விழுமியக் கல்வி என கல்விச சிந்தனையாளர்களும், ஒழுக்கவியலாளர்களும் வரைவிலக்கணம் கூறுகிறார்கள்.

கல்விச்சாலைகளில் ஓர் இயந்திரமயமான - தொழில்சார் ரீதியான - ஆங்கிலம் தழுவிய கல்வியே மாணவர்களுக்குப் புகட்டப்படுகிறது. இங்கு ஆங்கிலம் கற்பது பிழையென நான் வாதிடவில்லை. ஒரு மொழி அறிவைப் பெற்றுக் கொள்வது ஓர் ஆன்மாவைப் பெற்றுக்கொள்வதற்குச் சமன் என்றார் மகாத்மா காந்தி. ஆனால், அந்த மொழியறிவின் ஊடாக, எமது கலாசாரத்துக்குப் பொருந்தாத எமது பண்பாட்டு விமியங்களுக்கு வேட்டுவைக்கும் தோட்டாக்களாக அமையும் ஆபத்தான நாகரிகங்களை மெய்யென ஏற்றுவிடக்கூடாது என பதே எனது ஆதங்கம்.

இதனாலேயே மனிதன் மனிதனாக வாழ, மனிதத்துவம் மலர விழுமிய வேட்கைவேண்டும். கலைத்திட்டத்தினூடாக மாணவர்களிடையே விருத்திசெய்யவேண்டிய விழுமியக் கல்வியை கல்விச் சிந்தனையாளர்கள் மூன்றாக விளக்கியுள்ளனர். தனி நபர் விழுமியம் எனவும், சமூக விழுமியம் எனவும், ஆன்மீக விழுமியம் எனவும் விழுமியக் கல்வி விதைக்கப்பட்டாலொழிய, நவீன கல்வித் திட்டங்களினால் எவ்வித பயனுமில்லையென இவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள். இதனால், சமநிலை ஆளுமை உடைய மாணவர்களை உருவாக்குவதும் அதனூடாக உயரிய விழுமியங்களை அவர்களுக்கு உட்புகுத்துவதும் முக்கிய நோக்கமாகும். அத்துடன், அறிவு, திறன், மனப்பாங்குசார் வளர்ச்சிகள் உயர் விழுமியங்கள் தழுவியதாக அமையமுடியும்.

பகவத்கீதையிலுள்ள பக்தியோகா -
"பகைவனையும் நண்பனையும்
ஒன்றாகக் கருதுபவன், அதேபோல்
மானத்தையும் அவமானத்தையும்
நிகராக எண்ணுபவன்
குளிரிலும் வெப்பத்திலும், இன்பத்திலும்
துன்பத்திலும் ஒன்றாக இருப்பவன்,
இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும்
சமமாகக் கருதுபவன், மௌனமாக
இருப்பவன் கிடைத்ததில் திருப்தியடைபவன்
இருப்பிடமே தேடாதவன் உறுதியான
மனம் உள்ளவன், பக்திமான் - இவனே
எனக்குப் பிரியமானவன்"(அத் XII 18 -19)

அன்பு, பண்பு, நீதி, நியாயம், நட்புணர்வு, நற்குணம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஆகியன உருவாகும். இனம், மதம், மொழி என்பன கடந்து சிந்திக்கவேண்டும். சிந்தனை, சொல், செயல் ஒன்றுபட வேண்டும், ஒன்றாகவே இருக்கவேண்டும்.

இறுதியாக பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்க வேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பரந்துபட்ட சிந்தனையை உய்த்துணர்வதில் வளர்ப்பதன் மூலம் தனி மனிதன் உயர்வடைவான். சமூகம் சிறக்கும். நாடு உத்தம நிலையடையும். அப்போது தான் சண்டையொழிந்து, சமாதானம் மலர்ந்து சமாதானப் புறாக்கள் பறக்கும். ☆

# வரணி மருந்தகத்துக்கு நிரந்தரமாக டாக்டரை நியமிக்கக்கோரி மகஜர்

## ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபை அனுப்பிவைத்தது

வரணி,பெப்.28

வரணி மத்திய மருந்தகத்தில் இரவு நேரத்தில தங்கியிருந்து நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடியதாக நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்யுமாறும் -

தற்சமயம் புனரமைக்கப்பட்டுவரும் வைத்தியர் விடுதியை வைத்தியர் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவாறு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் இந்த மகஜரினை அனுப்பிவைத்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பாகத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இது விடயமாக, தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி அவசியமாகவுள்ளது. அத்துடன், ஆண்களுக்கான விடுதி ஒன்றும் தேவையாகவுள்ளது. ஏற்கனவே, மருந்துகளை வைத்துப் பாதுகாக்கவென இந்த மருந்தகத்துக்கு குளிர்சாதனப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டது. பின்னர் இது சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்று அவசரமாக வழங்கப்படவேண்டும்.

மின் இணைப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வயர்கள் பழுதடைந்துவிட்டன. எனவே, மின் இணைப்பைச் சீர்செய்யவேண்டியது அவசியமாகும். மருந்தகத்தின் தண்ணீர்த்தாங்கியின் குழாய்களும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவ்வாறு மருந்தகத்தின் பல்வேறு தேவைகளை விவரித்து இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (எ-170)

## கொடிகாமம் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வசதி செய்து தருமாறு கோரிக்கை

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்தித் தருமாறு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையைச் சூழவுள்ள பச்சிலைப்பள்ளி, கரம்பகம், மீசாலை, மிருசுவில் ஆகிய இடங்களிலிருந்து வரும் அவசர நோயாளிகளை உடனடியாக யாழ். போதனா வைத்திசாலைக்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு நோயாளர்களை அனுப்பிவைக்க வாகன வசதியைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமம் எதிர்கொள்ளப்படுகின்றது. வீணான உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கு அம்புலன்ஸ் வாகனம் அவசிய தேவையாகவுள்ளது என்று வைத்தியப் பொறுப்பதிகாரி அது குறித்து அனுப்பி வைத்த கடிதத்தில் [illegible]

# வீட்டுத்தளபாடங்களைத் திருடியோர் காரைநகர் பொலீஸாரிடம் சிக்கினர்

காரைநகர்,பெப்.28

காரைநகர் வேதரடைப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தளபாடங்களைத் திருடிய இருவர் நேற்றுமுன்தினம் காரைநகர்ப் பொலீசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இப்பகுதியில் உள்ள ஆள்கள் அற்ற வீடுகளில் இவர்கள் திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் திருட்டில் ஈடுபட்ட இருவரையும் கைதுசெய்தனர் எனக் கூறப்பட்டது.

இதேவேளை - வேதரடைப்புப் பகுதியில் பரவலாகத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனக் காரைநகர்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வே.சிற்சபேசன் தெரிவித்தார். (எ-73)



சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றிய சுகாதாரத் தொண்டர்களைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் கண்ணன் சுகாதாரத் தொண்டருக்குச் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: காவிட்டிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நெதர்லாந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தண்ணீர்த் தாங்கிகள் அன்பளிப்பு

கிளிநொச்சி, பெப்.28

நெதர்லாந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் தண்ணீர்த் தாங்கிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம், சல்லி மாதுமை அம்பாள் வித்தியாலயம் ஆகியவற்றிற்கு ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்த் தாங்கிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

நெதர்லாந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் அக்கழகப் பிரமுகர் புலேந்திரன் இந்தத் தண்ணீர்த் தாங்கிகளை அன்பளிப்புச் செய்தார். (3-12)

## சிரமதானம் மூலம் துப்புரவு

அரியாலை,பெப்.28

யாழ் ஈச்சமோட்டை விளையாட்டு மைதானச் சுற்றாடல் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், விளையாட்டு மைதானத்திற்கு அருகில் செல்லும் கழிவு நீர் ஓடும் வடிகாலும் சிரமதானம் மூலம் கடந்த புதன்கிழமை துப்புரவு செய்யப்பட்டதாக ஈச்சமோட்டை கிராம சேவையாளர் எம்.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.(எ-17)

# கொழும்பில் 7½ கோடி டொலர் செலவில் நவீன வசதிகளுடன் புற்றுநோய் ஆஸ்பத்திரி

## இந்திய அரசின் உதவியுடன் அமையும்

கொழும்பு,பெப்.28

கொழும்பில் சுமார் 7 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் புற்றுநோய்ச் சிகிச்சைக்கான அதிநவீன மருத்துவ மனை ஒன்றை அமைக்க இந்திய அரசு முன் வந்துள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகளை, கணிப பீடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் இந்தியச் சுகாதார அமைச்சின் இணைச் செயலாளர் டாக்டர் பவானி தியாகராஜன் தலைமையில் 5 பேர் கொண்ட மருத்துவ தூதுக்குழு ஒன்று மூன்றுநாள் விஜயமொன்றை இங்கு மேற்கொண்டுள்ளது.

இக்குழு புற்றுநோய்ச் சிகிச்சைக்கான அதிநவீன மருத்துவமனையைக் கட்டுவதற்குரிய இடத்தைக் கொழும்பில் தெரிவுசெய்வதில் இலங்கை சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுடனும் ஏனைய அதிகாரிகளுடனும் பேச்சுக்களில் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை, ஹற்றன், டிக்கோயா ஆகிய பகுதிகளிலும் நவீன மருந்துவமனையைக் கட்டிக்கொடுக்க இந்திய அரசு ஏற்கனவே முன்வந்துள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டன.

கொழும்பில் மிகவிரைவில் அமைக்கப்படவிருக்கும் புற்றுநோய் நவீன மருத்துவமனை தொடர்பாக இந்தியத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் மாலை பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த இந்திய சுகாதார அமைச்சின் இணைச்செயலாளர் பவானி தியர்கராஜன் இந்த வைத்தியசாலையைக் கட்டிமுடிக்க சுமார் 2 வருடங்கள் தேவைப்படும் எனவும் இது குறைந்த பட்சம் 150 படுக்கை வசதிகளைக் கொண்டதாக அமையும் எனவும் கூறினார். (3-12)

## வாகரையில் புனர்நிர்மாணப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படுகின்றன

மட்டக்களப்பு,பெப்.28

வாகரைப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் புனர்நிர்மாணப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாகரை - மூதூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் இந்தப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாகரைப் பிரதேசத்தில் உள்ள மிகவும் பின தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளுக்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மின்சாரவசதியற்ற இப்பாடசாலை மாணவர்கள் இரவுவேளைகளில் தமது கல்வியினைத் தொடரும் முகமாக இந்தச் சூரிய மின்கலங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 சூரிய மின்கலங்கள் முதற்கட்டமாகக் கடந்தவாரம் வழங்கப்பட்டுள்ளன.

மருதங்குடா தமிழ் வித்தியாலயம், பால்ச்சேரி தமிழ் வித்தியாலயம், கட்டுமுறிவுக்குளம் தமிழ் வித்தியாலயம், வெருகல் முகத்துவாரம் துவாரக வித்தியாலயம், பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயம் ஆகியவற்றிற்கே இந்தச் சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டுள்ளன. (3-12)

## காசோலைகளை பெற்றுக்கொள்க

தென்மராட்சி,பெப்.26

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த வருடம் மலசலகூட மானியத்திற்கு விண்ணப்பித்தவர்களில் 300 பேருக்குக் காசோலைகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானியத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மீசாலையிலுள்ள ஐயா கடையடியில் அமைந்திருக்கும் பணிமனையில் காசோலையைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-117)


கிளை பணிமனைப் பொறுப்பாளர் வவுனியா (Officer in Charge)

உதயன் - சுடர்ஒளி பத்திரிகை கிளைப் பணிமனைக்கு அடிப்படைத் தகைமைகளுடன் 5 வருடம் நிர்வாகம், கணக்கியல் (Administration, Accounts) துறையில் அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த, கிளைப் பணிமனையைச் சுயமாக நிர்வகிக்கக் கூடிய கிளைப் பணிமனைப் பொறுப்பாளர் தேவை.

10.03.2005இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

MASS MEDIA SYNDICATE (PVT) LTD.,
No.85,Jayantha Mallimarachi Mawatha,
Colombo - 14.
(C-41171) (21-14-26)



காணி விற்பனைக்கு

சுன்னாகம், புத்தூர் வீதியில் புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் நிலாவரைச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் 36 பரப்புக் காணி (வற்றாத கிணற்றுடன் கூடியது) விற்பனைக்குண்டு.

தொடர்பு:
அரசலிங்கம் சிவகுமாரன்
(42509)(42-17) T.P.: 0776 128432.



வேலை வாய்ப்பு

01. எலற்றிக் வெல்டர்
02. பயிலுநர்கள்

பயிலுநர்களுக்குத் தேசிய தொழிற்பயிற்சி சபையூடாகச் சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
லிங்கோ நுண்பட்டறை
109, சட்டநாதர் வீதி, நல்லூர்.
(42523)





கிறீன்பலஸ் எம்போறியம்

யாழ் நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!
அழகிய புடைவைத் திருசுகளின்
குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்
மங்கையவளின்
மனம் கவர்ந்த மாபெரும்
சாம்ராஜ்யம்
மலிவு விலைதானா?
என்பதை அறிந்துகொள்ள
வீடு செல்லுமுன் ஒருமுறை
விஜயம்செய்து பாருங்கள்.

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
(சி-41199)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்கில் போரில் இந்தியாவுக்கு நல்லபாடம் புகட்டினோம்!

## பாகிஸ்தான் அதிபர் பெருமிதம்



கார்கில் யுத்தம் இந்தியாவுக்குச் சிறந்த தொரு பாடத்தைப் புகட்டியிருக்கின்றது. அத்தோடு எட்டுப் படிப்பினைகளையும் கொடுத்திருக்கின்றது. காஷ்மீர் பற்றிய உண்மைகளைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

- இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதியும், இராணுவத் தளபதியுமான பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார். முஷாரப் தனக்கென உருவாக்கியிருக்கும் இணையத்தளம் ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தொடர்ந்தும் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பாகிஸ்தானுக்கான பஸ் பயணம் அதிகளவில் தம்பட்டம் அடிக்கப்பட்டது. அவரின் பயணத்தின்போது சமரசப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற்றது. ஆனால், பாரதிய ஜனதாக்கட்சியின் தலைமையிலான ஆட்சி கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதன் பிறகு, இருதரப்பு உறவில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் இணைந்து நியூயோர்க்கில் வைத்து கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டேன். அது காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கான முயற்சியில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றமாகும்.

அணுவாயுதப் பரவலுக்குக் காரணமாக இருந்ததாகப் பாகிஸ்தான் மீது பழிச்சொல் விழுந்துவிடாமல் நான் தடுத்தேன். பாகிஸ்தானின் அணுவாயுதத் தந்தையான அப்துல் கதிர்கானை கதாநாயகனாகக் கொண்டாடிய போது சர்வதேசம் அவரை ஒரு குற்றவாளியாகச் சுட்டிக்காட்டியது.

அந்த நேரத்திலும் நான் அவர்மீது தக்க நடவடிக்கை எடுத்தேன் - என்று கூறியிருக்கிறார்.

(த-க)

# ஈராக்கைதிகள் சித்திரவதை; மூவருக்குச் சிறைத்தண்டனை

பக்தாத்,பெப்.28

ஈராக்கில் இருக்கும் 'அபுகரைப்' சிறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அமெரிக்க, இங்கிலாந்து வீரர்கள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு மூன்று இராணுவத்தினருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த விசாரணை ஜேர்மனியில் உள்ள இராணுவ ரீதியாகவும் நடைபெற்றது.

7 அதிகாரிகளும் ஒரு நீதிவானும் விசாரணை நடத்தி இவர்களுக்குச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்கள்.

மார்க்லி (வயது - 25) என்பவருக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனையும் டானியல் சென்யான் (வயது 33) என்பவருக்கு 18 மாத சிறைத்தண்டனையும் டாலின் லார்கின் (வயது 30) என்பவருக்கு 5 மாதம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

# ஐ.நா.அமைதிப்படை மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## ஆபிரிக்காவில் 9 பேர் பலி!

ஆபிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டில் அடிக்கடி உள்நாட்டு போர் ஏற்பட்டு வருகின்றது. அங்கு ஐ.நா சபையின் சார்பில் 16 ஆயிரம் வீரர்களை கொண்ட அமைதிப் படை குவிக்கப்பட்டுள்ளது. இது ரி என்ற இடத்தில் பாகிஸ்தான், வங்காளதேசம், மொராக்கோ, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்து 800 வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

உலக அரங்கில்

இந்த நிலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் வங்காளதேசத்தை சேர்ந்த 9 வீரர்கள் பலியானார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஐநா பொதுச் செயலாளர் கோபி அனான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (த)

# தலிபான் கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்துவதை அதிகரிக்கவுள்ளனர் என அமெரிக்கா எச்சரிக்கை!

வாஷிங்ரன், பெப்.28

ஆப்கானிஸ்தானில் குளிர்காலம் முடிவடையும் வேளையில் தலிபான் கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்துவதை அதிகரிக்கவுள்ளனர் என்று அமெரிக்க இராணுவம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இரண்டு நாள்களாக இடம்பெற்ற பாரிய வன்செயல்களில் 22 இற்கும் மேற்பட்ட கிளர்ச்சிவாதிகளும் ஆப்கான் துருப்பினர்கள் சிலரும் கொல்லப்பட்டனர் எனவும் அமெரிக்க இராணுவம் மேலும் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தற்போது நிலைகொண்டிருக்கும் அமெரிக்கா தலைமையிலான 18 ஆயிரம் துருப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் இல்லை என்று கூறியுள்ளது.

அதிக கிளர்ச்சித் தாக்குதல் இடம்பெறலாம் எனத் தான் எதிர்பார்கிறார் என்றும் துருப்பினர்கள் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் - அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானின் தெற்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளில் தலிபான் கிளர்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் கடந்த 18 மாதங்களில் ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட கிளர்ச்சிவாதிகள், பொதுமக்கள், நிவாரணப் பணியாளர்கள், வெளிநாட்டவர்கள், ஆப்கான் துருப்பினர்கள் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

சென்ற வியாழக்கிழமை தலிபான் கிளர்ச்சிவாதிகள் பாகிஸ்தானின் எல்லைப் பகுதிகளின் அருகிலுள்ள பல இடங்களில் அரச படையினரின் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் 10 ஆப்கான் துருப்பினர்கள் கொல்லப்பட்டனர்; 8 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில அமெரிக்கச் சிப்பாய் ஒருவரும் அடங்குவார்.

இந்த மாதம் இடம்பெற்ற பாரிய தாக்குதல் சம்பவம்ஒன்றில் 13 தலிபான் கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கான் - அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

(த)

# தாய்வான் கட்டடத் தொகுதியில் திடீரென தீவிபத்து; 4 பேர் பலி!

பாங்கொங்,பெப்.28

- தாய்வானின் டாய்சிங் நகரில் அமைந்துள்ள உயரமான கட்டடமொன்று திடீரென தீப்பிடித்து எரிந்ததில் நான்கு பேர் உயிரிழந்தனர்; மூன்று பேர் காயமடைந்தனர், பலர் ஓடி உயிர்தப்பினர் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய்வானின் மூன்றாவது பெரிய நகரான பாய்சிங்கின் மிகப் பிரபல்யம் வாய்ந்த - 25 மாடிகளைக் கொண்ட கோல்டன் பிளாசாடவர் எனும் சட்டத்தின் 18 ஆவது மாடியிலேயே தீப்பிடித்தது என்றும் -

இதனால், அப்பகுதி புகைமூட்டத்தால் நிரம்பியிருந்தது என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது.

தீயணைப்புப் படையினர் உடனடியாக விரைந்து வந்து ஒன்றரை மணிநேரத்துக்கு தீயை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்தமையால் உயிர்ச்சேதங்களையும் பொருள்சேதங்களையும் குறை கமுடிந்தன என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். சிறிது நேரம் அப்பகுதியில் பரபரப்பும் பீதியும் காணப்பட்டது.

தீப்பற்றி எரிந்த கட்டடத் தொகுதியின் 18 ஆவது மாடியில் கடைகள், பிரத்தியேக வகுப்பு நிலையங்கள் மற்றும் உணவு விடுதிகள் என்பன இயங்கிவந்தன.

இக்கட்டடத் தொகுதியில் தீப்பிடித்தமைக்கான காரணங்கள் என்னவென்று திட்டவட்டமாகத் கண்டுபிடிக்கப்படவில்லை என்று ஒருவர் தெரிவித்தார்.

இத்தீவிபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாய்வான் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு, கட்டடத் தொகுதியின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிபத்து ஏற்பட்டமையால் குறித்த கட்டடத் தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று கட்டடத் தொகுதியின் நிர்வாகத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(த-க)

# இஸ்ரேலில் குண்டுத் தாக்குதல்: தொடர்புடைய ஏழு பேர் கைது!

டெல்அவிங்,பெப்.28

இஸ்ரேலின் டெல் அவிங் நகரில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குலுடன் தொடர்புடைய ஏழு சந்தேகநபர்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

பெப்ரவரி (இம்மாதம்) மாத ஆரம்பத்தில் இஸ்ரேலிய - பலஸ்தீனத் தலைவர்கள் மத்திய கிழக்கில் தொடரும் வன்முறைகளை நிறுத்துவதற்கான உடன்படிக்கைக்கு வந்திருந்தனர்.

எகிப்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே இன்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்காக தமது விருப்பத்தை வெளியிட்டிருந்தனர். அதன் பின்னர் இரண்டு வாரங்களாக அமைதியாக இருந்த மத்திய கிழக்கில் நேற்றுமுன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சீர்குலைத்துள்ளது.

இஸ்ரேலின் டெல் அவிங்கரேங்கோப் பகுதியிலுள்ள இரவு விடுதியொன்றுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை இஸ்ரேல் - பலஸ்தீனத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

மத்திய கிழக்கில் மீண்டும் வன்முறைகளைத் தூண்டிவிடும் கிளர்ச்சிவாதிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்தார்.

வன்முறைகளைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கு இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் அந்த நாட்டுப் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (த-க)

# நாயைக் கடித்துக் குதறிய நபருக்கு ஸ்கொட்லாந்தில் சிறைத்தண்டனை

லண்டன், பெப்.28

ஸ்கொட்லாந்தில் தனது செல்லப்பிராணியான நாயைக் கடித்துக்குதறி எட்டி உதைத்த ஒருவர் அந்நாட்டுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

விலங்கினங்களைத் துன்புறுத்துவதைத் தடைசெய்யும் சட்டத்தின் கீழ் டேவிட் (வயது 34) என்ற அந்த நபர் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

விழிப்புலன் அற்ற இவர் தனது 8 வயது செல்லப்பிராணியான நாயின் துணையுடனேயே வெளியே செல்வார். இவ்வாறு ஒருநாள் கடைக்குச் சென்றபோது திடீரென தனது நாயைக் கடித்துக் குதறி எட்டி உதைத்தார். வலி தாங்க முடியாமல் நாய் சத்தமிட்டுக் குரைத்தது. ஆனால், அது திரும்பக் கடிக்கவில்லை என்பது தான் அதிசயம்.

நாயை எட்டி உதைதததைக் கண்ட மக்கள் பொலீஸாருக்கு அறிவிககவே டேவிட்டைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

விலங்கினங்களைத் துன்புறுத்துவதைத் தடைசெய்யும் சட்டம் அமைதியைச் சீர்குலைத்தது போன்ற சட்டப் பிரிவுகளின் கீழ் டேவிட் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. (த-க)




# வானிலை முன்னறிவிப்பு பிழைத்தால் அபராதம்!

வானிலை முன்னறிப்பு பிழைத்தால் அந்த அறிவிப்பை வெளியிட்ட அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று மொஸ்கோ நகர மேயரும் நீதிவானுமான லஸ்ச்கோவ் எச்சரித்திருக்கிறார்.

இந்த மாதத் தொடக்கத்தில் மொஸ்கோவில் வானிலையில் மாற்றம் இல்லை. கடந்த வாரம் என்று வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அன்று இரவு மட்டும் 20 செனிரி மீற்றர் உயரத்துக்குப் பனி பொழிந்தது. 36 டிகிரி வெயில் கொளுத்தியது. எனினும் அவற்றை முன்னரே அதை அறிவிக்க வானிலை அதிகாரிகள் தவறிவிட்டனர்.

இதைத் தொடர்ந்தே வானிலை அதிகாரிகளுக்கு அபராத எச்சரிக்கையை அவர் விடுத்திருக்கிறார்.

எடுத்த எடுப்பில் காலநிலையில் மாற்றமில்லை - வானிலை சுமாராக இருக்கும் என்று அறிவித்துவிட்டு இருக்கும் வானிலை அதிகாரிகளுக்கு இந்த எச்சரிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றதாம். அவர்கள் இப்போது உஷாரடைந்துவிட்டார்கள்.

# திருமதி உலக அழகியாக இஸ்ரேல் பெண் தெரிவு

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆம்பி பள்ளத்தாக்கில் 2005 ஆம் ஆண்டுக்கான 'திருமதி உலக அழகி' போட்டி வெள்ளியன்று நடைபெற்றது. இந்தியாவின் முதன் முறையாக நடத்தப்பட்ட இப்போட்டியில் பங்குபெற உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் திருமணமான பெண்கள் திருமதி அழகிகள் பலர் வந்திருந்தனர்.

இப்போட்டியில் பங்குபற்றிய திருமதி அழகிகளிடம் அழகு, அறிவு , பண்பு மற்றும் பெண்களுக்கான குடும்ப மதிப்பீடுகள் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டன.

,, கேட்டகப்பட்ட அத்துணை கேள்விகளுக்கும் சிறந்தமுறையில் பதிலளித்த இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த சீமா பக்கர் என்பவர் திருமதி உலக அழகியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உலக அழகி மற்றும் திருமதி உலக அழகி போன்ற போட்டிகளுக்கு இன்னும் எதிர்ப்புகள் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.28

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் இந்த ஆண்டுக்குரிய புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய தலைவராக கே.ஜெயகாந்தனும் செயலாளராக க.பார்த்திபனும் பொருளாளராக பி.ஜெயந்தபவனும் தெரிவாகினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தப் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

(த-7)

## வீதி சேதம்

செம்பியன்பற்று,பெப்.28

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி வீதி பாடசாலைக்கு அண்மையில் பெரும் சேதமடைந்துள்ள தால் அப்பகுதியால் பயணம் செய்யமுடியாது பொதுமக்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக உரியவர்களிடம் பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்தும் எவ்வித பலனும் இல்லை எனவும் உரியவர்கள் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(த-203-36)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து




28-02-2005

**புலேந்திரன் – ஜெயராணி**
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**செல்வி விஸ்வினி**
இன்று (28.02.2005) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தைக் ஹொலண்டில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரைக் ஹொலண்டில் இருக்கும் அப்பா, அம்மா, அண்ணாமார் மற்றும் அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று வாழ்த்துகின்றார்கள்.

**க.மகாதேவன்**
(அப்பப்பா).

(42555)(24-14-15-26)

துவாரகை,
பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.


## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி ஆர்.சிவச்சந்திரன், மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(த-203)


## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் கிளையைச் சேர்ந்த
சதா பேக்கரி உரிமையாளா
**குமாரசாமி சுப்பிரமணியம் (மணியம்)**

அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-41220)(26-14-15)

**நிர்வாகம்,**
**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

## துயரோடு இணைகின்றோம்

எமது கல்லூரியின் 5ஆம் அணி சித்திரத்துறை முகிழ்நிலை
**ஆசிரியர் த.கண்ணன் அவர்களின்**
அன்புத் தந்தையார்
**கணபதிப்பிள்ளை தங்கலிங்கம்**
[குருக்கள் மடம், மட்டக்களப்பு]

அவர்கள் 27-02-2005 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயரில் இணைந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**யாழ். தேசிய கல்வியியல்**
**கல்லூரிச் சமூகம்.**

(42556)(46)

## நெஞ்சகலா நினைவஞ்சலி

6ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு





அமரர்
**ஆறுமுகம் சம்பந்தர்**
(இளைப்பாறிய அதிபர்)

திருமதி
**சம்பந்தர் நாகம்மா**

| | | |
|---|---|---|
| 1912-03-28 | மலர்வு | 1925-02-25 |
| 1998-10-11 | உதிர்வு | 2004-03-11 |
| சஷ்டி | திதி | பஞ்சமி |

ஆண்டாண்டு நீங்கினாலும் ஆழ்மனதை நீங்காது
ஆண்டாண்டு காலத்திற்கும் நிலைத்திருக்கும் நினைவுகளை
அள்ளித் தந்திட்ட பெற்றோரே - உங்கள்
அன்பார்ந்த அருள்மொழிகள்
அகமெங்கும் அலை அலையாய்....!
உங்களுடைய ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திப்போம்.

193, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(42554) (26-14-15)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## வேலை வாய்ப்பு

*உளநலச்சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**01) லிகிதர்**
**02) உளவளத் துணையாளர்**
**03) உளநல சமூக சேவையாளர்**

*வயது 20 இற்கும் 40 இற்கும் இடையில்*

**கல்வித் தகைமை:**
O/L *சித்தி அடைந்திருக்க வேண்டும் மற்றும்* A/L, *தட்டெழுத்து, கணனி அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

விண்ணப்பங்களை 07.03.2005 இற்கு முன்னர்
**செயலாளர், உளநலச்சங்கம், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை**
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## வீடுகள் விற்பனைக்கு

யாழ். இராஜேந்திரா வீதியில் 1¾ பரப்புக் காணியில் நவீன வசதிகளுடனான இரு வீடுகள் விற்பனைக்குண்டு. இரு வீடுகளும் தலா இரண்டு, மூன்று படுக்கை அறைகளைக் கொண்டவை.

விவரங்களுக்கு: யாழ்ப்பாணத்தில்
**அன்ரன் வில்லவ ராஜசிங்கம்**
(காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை)
**T.P. No.: 021 222 2253**
கொழும்பில்:
ராஜு
**T.P. No.: 01 22380191**
அல்லது
**0773 128252**

(24-14) (சி/41214)

## 26.02.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300091025 இலிருந்து 300109045 வரை

சீட்டிழுப்பு இல. 1585

**01 39 62 70** சுப்பர் எண் **07**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.72,60,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 72,60,950/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 38 | 5,000/- | 1,90,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 477 | 1,000/- | 4,77,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,603 | 500/- | 8,01,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,441 | 40/- | 9,37,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,229 | 20/- | 4,44,580/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,34,188 | 10/- | 33,41,880/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.86,92,600/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 86,53,600/-**

தொடர் இல. 200115059 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 2 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

**300097905-8-40**
**300099637-7-94**
**300100322-6-11**
**300104057-7-93**
**300094303-8-71**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## விசேட கண்சிகிச்சை முகாம்

முல்லைத்தீவு,பெப்.28

இங்கிலாந்து நாட்டின் விசேட கண் சிகிச்சை மருத்துவக் குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிபுணருடன் இணைந்து எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பிலும் கிளிநொச்சியிலும் விசேட கண்சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

கண் சம்பந்தப்பட்ட சகல நோய்களுக்குமான சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சைகளும் இதில் வழங்கப்படவிருக்கின்றன.

இந்தச் சிகிச்சை முகாமில் பங்குபற்றிப் பயன்பெற விரும்புவர்கள் அருகிலுள்ள திலீபன் மருத்துவமனை மற்றும் டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலை ஆகியவற்றில் பரிசோதனை செய்து பதிவுகளை [illegible] கிறது.

(த)


## 65ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30-11-1977 — மறைவு 26-12-2004



அலை கடல் வந்தே ஆயுள்
பறித்ததோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (28-02-2005) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன.

இதில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அமரர்**
**குமாரசாமி பிரதீபன்**

[illegible] ஒழுங்கை,
கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை.

(42555)(26-14-15)

- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் இப்போது கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு!

பரந்தன்,பெப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சில கடைகளில் மாத்திரமே மா உள்ளது. அவர்களும் ஒரு கிலோ மா 30 ரூபா வீதம் விற்பனை செய்கின்றனர் எனப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் வெதுப்பகங்களுக்கு மட்டுமே மாவை விநியோகம் செய்து வருகின்றன.

கடைகளில் கோதுமை மா இல்லாமையால பெரும்பாலான மக்கள் அரிசி மாவையே வாங்கிச்செல்கின்றனர் எனவும் -

மேற்படி மா தட்டுப்பாடு தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்படவேண்டும். வெளிநாடுகளில் கடலில் கொட்டும் கோதுமை மாவை நாம் நம்பி வாழக்கூடாது. எமது தேசத்தில் உற்பத்திசெய்யப்படும் பொருள்களை எமது உணவுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்பழகவேண்டும்.

இதற்காக நாம் எமது பிரதேசங்களில மென மேலும் உற்பத்திகளை மேம்படுத்தி எமது மக்களின் வாழ்வாதரத்தைப் பெருக்கி பொருளாதார வளத்தை உயர்த்தவேண்டும் - என்றார்.

(352-203)

## இடம்பெயர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாமில்

புதுக்குடியிருப்பு,பெப்.28

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாத்தளன், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாம் ஒன்றில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து இதுவரை நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த புதன்கிழமை 66 வீடுகளை ஐ.சி. ஆர்.சி. நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் வைபவ ரீதியாகத் திறந்து மக்களிடம் கையளித்துள்ளன.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களும், வீட்டுப் பாவனைப் பொருள்களும் தலா ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன.

(த-353-202)

## இந்த வருடம் 110 ஏக்கரில் பிரமந்தனாறில் சிறு போகம்

பரந்தன்,பெப்.28

பிரமந்தனாறு குளத்துக்குக் கீழுள்ள வயல்களில் இந்த வருடம் 110 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரமந்தனாறு குளத்தின் கீழ் 2005 ஆம ஆண்டுக்கான சிறுபோகச் செய்கை தொடர்பான கூட்டம் கடந்தவாரம் இடம்பெற்றது.

கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் க.கந்தசாமி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.என்.செல்வராசா, விவசாயிகளின் ஓய்வூதியக் காப்புறுதி உத்தியோகத்தர் மற்றும் திட்டக் குழுத்தலைவர் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

பிரமந்தனாறு குளத்தில் தற்போது 11 அடி 10 அரை அங்குலம் தண்ணீர் இருப்பதால் இம்முறை 110 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்வதற்கும் -

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து நெற்செய்கை மேற்கொள்பவர்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குவதெனவும், விதைப்புச்செய்யும் நெல் இனம் 3 தொடக்கம் மூன்றரை மாத வயதுடையதாகவே இருக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அத்துடன், 15.07.2005 இல் நெலலுக்கான நீர் விநியோகம் நிறுத்தப்படும் எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

(த-203-352)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## முத்தையன்கட்டு வாய்க்கால்களின் திருத்தங்களைத் துரிதப்படுத்த வலிறுத்து

ஒட்டுசுட்டான்,பெப்.28

முத்தையன்கட்டு மூலம் சிறுபோகச் செய்கைக்கான நீர் வழங்கப்படவுள்ளதால் வாய்க்கால் திருத்தவேலைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கே.சிவநாதன் ஒப்பந்தக்காரர்களைக் கேட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-

தொடரவிருக்கும் சிறுபோகச் செய்கைக்கு வாய்க்கால்கள் மூலமே நீர் விநியோகம் செய்யப்படவேண்டும். இந்நிலையில், வாய்க்கால்கள் பாதிப்படைந்துள்ளதால் மண் தூர்ந்து காணப்படுகின்றன.

இதற்கான திருத்த வேலைகளை மிகவும் துரிதகதியில் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களும், கமக்கார அமைப்புகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

முத்தையன்கட்டு வலதுகரை பிரதான வாய்க்காலில் 17 கிலோ மீற்றர் தூரமும் இடதுகரைப் பிரதான வாய்க்காலில் 7 கிலோ மீற்றர் தூரமும் திருத்தம் செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.(த-203-341)

## விவசாய நிலங்களில் கல் அகழ்வு; தடைசெய்யுமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,பெப்.28

முத்தையன்கட்டு இடதுகரை 3ஆம் கண்டப் பகுதியில் விவசாய நிலங்களில் கல் அகழ்வுகள் நடைபெறுவதால் நிலங்கள் வீணடிக்கப்பட்டு விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது என ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகத்தில் நடைபெற்ற திட்டக் குழுக்கூட்டத்தில் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கருத்து தெரிவிக்கும் போது:-

இப்பகுதிகளில் கல் அகழ்வுகள் ஏற்கனவே தடைசெய்யப்பட்டன. ஆனால், அப்பகுதி மக்கள் தமது சுய தேவைகளுக்காகக் கற்களை எடுக்கின்றனர் எனக் கூறியதையடுத்தே அங்கு கல் அகழ்விற்கு அனுமதிவழங்கப்பட்டது.

அவர்கள் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வியாபாரத்திற்காகவும் கற்களை அகழ்கின்றனர். எனவே, இது தடைசெய்யப்படவேண்டும் என்றார். இதனையடுத்து முத்தையன்கட்டுத் திட்டத்திற்குள் கல் அகழக்கூடாது என்று தடைசெய்யுமாறு அரச அதிபர் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், கமக்கார அமைப்பினர் ஆகியோருக்கு அறிவிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(த-203-341)

## மெய்வன்மைப் போட்டிகள் சிறப்புற நடைபெற்றன

மல்லாவி,பெப்.28

முல்லைத்தீவு, யோகபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சிவப்பிரகாசம் கலந்துகொண்டார்.

போட்டிகளில் முதலாமிடத்தை இலக்குமி இல்லமும், இரண்டாவது இடத்தை பார்வதி இல்லமும் மூன்றாவது இடத்தை சரஸ்வதி இல்லமும் பெற்றுக்கொண்டன. (த-322-202)

★ ★ ★

முழங்காவில்,பெப்.28

ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 11ஆம் திகதி மாலை 2 மணிக்கு ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் திருமதி முருசோதி ஸ்ரீரதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை கலந்து சிறப்பித்தார். (த-323)

★ ★ ★

வேரவில்,பெப்.28

முழங்காவில் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் பா.சிவராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-323-203)

★ ★ ★

வேரவில்,பெப்.28

கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றன.

பாடசாலை முதல்வர் அகுமரகுருபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகவும் முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (த-323-203)

## வீடமைப்புக் கடன்களை மீளச்செலுத்த அவகாசம்

புதுக்குடியிருப்பு,பெப்.28

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் 2000ஆம் ஆண்டில் கடன் எடுத்து மீளச்செலுத்தத் தவறியவர்களுக்கு அடுத்த மாதம் 31ஆம் திகதி வரை தவணை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினங்களுக்கு கடனை மீளச் செலுத்துவோருக்கு 25வீத சலுகை வழங்கப்படவுள்ளதாகவும் அதிகார சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களைப்பெற விரும்புவோர் தத்தம் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (த-353-202)

## முல்லைத்தீவுக்கு நில அளவையாளர்

புதுக்குடியிருப்பு,பெப்.28

முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் புதிய நில அளவையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கனகையா அழகேந்திரம் என்பவரே அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் அனுராதபுரம் மாவட்டத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-353-202)

## மோ.சைக்கிள்கள் நேருக்குநேர் மோதின

வேரவில்,பெப்.28

பூநகரி, 4ஆம் கட்டை பிரதான வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் பள்ளிக்குடாவைச் சேர்ந்த ரஞ்சன், கில்பேட் ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்களில் பலத்த காயங்களுக்கு உள்ளானவர்கள் பள்ளிக்குடாவைச் சேர்ந்த கில்பேட் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-323-203)

## நாச்சிக்குடாவில் விபத்து இருவர் படுகாயம்

வெள்ளாங்குளம்,பெப்.28

மன்னார் வீதி, நாச்சிக்குடாவில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே ஓடிய நாய்மீது மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இ.ஆனந்தராசா (வயது -42), பா.ரவிச்சந்திரன் (வயது 36) ஆகிய இருவருமே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் முழங்காவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(த-203-415)

## தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை

புதுக்குடியிருப்பு,பெப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அவற்றை மீளப்பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படங்கள், முத்திரை என்பவற்றைக் கொண்டு வந்து நடமாடும் சேவையின் மூலம் அடையாள அட்டைகளைப் பெறுமாறு தலைமைக்காரியாலய உதவி அரச அதிபர் ப.ஆரணி தெரிவித்துள்ளார்.

(த-202-353)

## முழங்காவில் முன்பள்ளிகளின் ஆசிரியர் ஒன்று கூடல்

பரந்தன்,பெப்.28

முழங்காவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பிரதேச ஒன்றுகூடல் கடந்த 23ஆம் திகதி 'ஆனுமு' நிறுவனத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையப் பிரதேச கட்டமைப்புத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் முன்பள்ளியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அவற்றின் பாடத திட்டம் தொடர்பாகவும் கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் சு.சிவநாதன் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவால் முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டுவரும் பொது அறிவுப் பரீட்சை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் யோ.நிலா, ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு நிர்வாக அலுவலர் சு.பிரியா, 'ஆனுமு' நிறுவன இணைப்பாளர் சி.சிவசாமி, நிறுவனத் திட்டக்கணிப்பாளர் எஸ்.சரஸ்வதி எனப் பலர் கலந்துகொண்டனர்.

(த-203-352)

## பேடன்பவல் தினம் அனுஷ்டிப்பு

மல்லாவி,பெப்.28

சாரணியத்தின் தந்தை பேடன்பவல் பிரபுவின் 148ஆவது பிறந்ததின நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சாரண ஆசிரியர் சு.சுபரேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைத் துணுக்காய் பிரதேச அரசியலதுறை நிர்வாகப் பெறுப்பாளர் புவிதனும் சாரணியக் கொடியை சாரணிய ஆசிரியை திருமதி ந.சர்வேஸ்வரனும் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் துணுக்காய் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சந்திரபாலன் கலந்துகொண்டார்.

(த-202-322)

★ ★ ★

வேரவில்,பெப்.28

பூநகரி மகாவித்தியாலயத்தில் சாரணியத்தின் தந்தை பேடன்பவலின் 148ஆவது நினைவு தினம் கடந்த 22ஆம் திகதி சிறப்புற நடைபெற்றது. பாடசாலை அதிபர் பொன்.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சாரணர் குழுத்தலைவர் கிநாமேஸ குமாரின் ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் மற்றும விளையாட்டு நிகழ்வுகளும் பாசறைத் தீ நிகழ்வு என்பனவும் நடைபெற்றன. (த-323-203)

## வலைப்பாடு றோ.க.த.க. மெய்வன்மைப் போட்டி

முழங்காவில்,பெப்.28

கிளிநொச்சி, வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சு.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பூநகரிக் கோட்டக்கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார். (த-323-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எம்மிடம் RL தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 021 4591921 (42531)

## வீடு விற்பனைக்கு

இல. 55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (42547)

## வாடகைக்குத் தேவை

யாழ்நகரில் அல்லது யாழ்நகரை அண்மித்த பகுதிகளில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு இரு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 021 226 3513 (42484)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க பவுண் (ஆண்களுடையது) கைச்சங்கிலி ஒன்று 26.02.2005 சனிக்கிழமை சங்கானைக்கும் யாழ். ஐந்து சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777112074 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். உயர்நத சன்மானம் வழங்கப்படும். (42549)

நல்லூரைச் சேர்ந்த அன்ரன் பெனடிக்ற் யூட்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (821824710V) யாழ்நகருக்கும் நல்லூருக்குமிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். T.P.: 077 6354362 (42531)

## ஒரு காதலின் கதை

வெளிநாட்டவர்களே! 50 ஆண்டுகளுக்கு முந்திய இலங்கையைப் பார்க்கப் போகிறீர்களா? எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் "ஒரு காதலின் கதை" நாவலை வாசியுங்கள். ரூபா 150/-. (42550)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் தலா மூன்று படுக்கையறைகள் கொண்ட இரு குடும்பமாக வதிய வசதியுடன் மாடி வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
**SK கடை,**
**மானிப்பாய் சந்தி, மானிப்பாய்.** (42546)(24-14)

# தனியான கட்டடம் அமைத்துத் தருமாறு வடமராட்சி றோ.க.பாடசாலை கோருகிறது

ஆழிப்பேரலையால் அழிவடைந்துள்ள வடமராட்சி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கெனத் தனியாக வகுப்பறைக் கொட்டகைகள் அமைக்கப்பட வேண்டுமென அந்தப் பாடசாலைக் கல்விச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பாடசாலைக் கட்டடங்கள் யாவும் முற்றாக அழிவடைந்த நிலையில் தற்போது இப்பாடசாலை குடத்தனைப் பாடசாலையில் தற்காலிகமாகச் செயற்பட்டு வருகின்றது.

இப்பாடசாலைக்கு ஏற்கனவே வகுப்பறை வசதிகள் பற்றாக்குறையாக உள்ளன.

இந்த நிலையில் இந்த இரு பாடசாலை மாணவர்களும் இங்கு கல்வி கற்பதில் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

எனவே, தமக்கெனத் தற்காலிகப் பாடசாலைக் கொட்டகைகளை அமைத்துத் தருமாறு இந்தப் பாடசாலைச் சமூகம் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கேட்கப்பட்டுள்ளது. (3-12)

# வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.28

பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடந்து 13 தினங்கள் நடைபெறவுள்ள இந்த மகோற்சவத்தில் எதர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (3-203)

## நீங்கா நினைவுகளில் இருபத்தியிரண்டாண்டுகள்

பிறப்பு 29 - 04 - 1928



இறப்பு 28 - 02 - 1983

### அமரர் கனகசபை சச்சிதானந்தன்

(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி- வட்டுக்கோட்டை)

திதி: 25.02.2005

பல்லாண்டு போனது எனினும்
நீங்கா நினைவுகளுடன் நாமிங்கே
நல்லவராய், வல்லவராய் வாழ்ந்து
போனீர் "சாரணியச் சச்சி" என்றே
எல்லோரும் சொல்லும் வகை வாழ்ந்தீர்
எமக்கெல்லாம் இன்றும் பெருமை வைத்தீர்
நல்லப்பாவாய், நண்பனாய், ஆசானாய்
உற்றதுணையாயெமைக் காத்தருகிருந்தீர்
எல்லாம் கனவாய் பழங்கதையாய்
உங்கள் நீங்கா நினைவுகளெம்முடனே!

டச் வீதி, மூளாய், சுழிபுரம்.

பாசமுள்ள மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(42545) (39-24-14)

# மரண அறிவித்தல்கள்

## கொன்ஸ்ரன்ரைன் யேசுதாசன்

(முத்துராசா)

(முன்னாள் கிளை முகாமையாளர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம், தலைவர், அச்சுவேலி மேற்கு விவசாய சம்மேளனம்)

சிற்றம்பலபுரம், அச்சுவேலியைச் சேர்ந்த கொன்ஸ்ரன்ரைன் யேசுதாசன் (முத்துராசா) அவர்கள் 26-02-2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் றூபி (ஹொலண்ட்), ஜீவன், யூட் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஜஸ்ரின் (ஹொலண்ட்), மரியறொய்சி, சந்திராதேவி (லதா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற பேர்ண்டேற் (புஷ்பம்), யோசேப்பு, மரியதாசன், றீற்றா, மாகிறேற் ஆகியோரின் அன்புச் சகோதரரும் றொஷான், வேடினன்ட், மிறோன், டெமினா, மரியெற்றோ, கனிஸ்ரஸ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-02-2005) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிற்றம்பல பவனம், அச்சுவேலி.* (42544)(26-14-24)

தகவல்: ஜீவன் (மகன்).

## திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம்

(செல்லக்கா)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம் 26-02-2005 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வராணி (ஆவரங்கால்), கந்தசாமி (தேவன் - ஸ்ரீரங்கன் ரேடிங் கம்பனியின் பங்காளர், கொழும்பு - வவுனியா) (கனடா), நடராசா (வாமு - கனடா), ஜெயராணி (ஜெயா - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வி.அருளம்பலம் (ஆவரங்கால்), இராசசுசி (கனடா), நாகேஸ்வரி (கனடா), சிவநேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காவேரி, தேவபானு, தேவிதா, சபீனா, சஞ்சீபன், நேருஜன், மேனுஜன், தேனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (01-03-2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரதடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு. T.P.No: 060 2213391

தகவல்: வி.அருளம்பலம் *(மருமகன்)*, இ.கந்தசாமி *(தேவன் - மகன்)*. (42548)(26-14-24)

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின்



தமிழ்ப்பேராசான்
திருமதி **கி.பவசிங்கம்**
அவர்கள்
இன்று (28. 02. 2005)
திங்கட்கிழமை
ஓய்வுபெறுகின்றார்

மானிப்பாய் இந்துத் தாயின் மடியில் தவழ்ந்த
மாணவத் தளிர்களைத் தத்தெடுத்த தாயார்களில் ஒருவராகி
அமுதெனத் தமிழூட்டி வளர்த்த - எம்
அமிழ்தினுமினிய பவசிங்கம் அம்மா!
ஓய்வு காலத்திலும் ஒளிர்வுடன் வாழ்வீர்!

**மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.** (சி-41219) (24-14)

- கல்லூரிச் சமூகம்.

## கணனிப் பரீட்சை பெறுபேறுகள

யாழ்ப்பாணம்,பெப்.28

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சிநெறியில் இணைந்து கற்ற மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், கணனிக் கற்கையை மேற்கொண்ட மாணவர்கள் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேற்றினைப் பார்வையிடலாம் என்றும் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் அறிவித்துள்ளார். (எ)


## எமது வாடிக்கையாளர்களே!



எமது ஸ்தாபனத்திற்கு புதிய இன மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு வந்துள்ளன. விசேடமாக பெண்களுக்குரிய மோட்டார் சைக்கிள்களும் வந்துள்ளன.

பல்சர் 180CC, பல்சர் 150CC, பல்சர் 150(எலோவீல் பொருத்தப்பட்டது), வின்ட் 125, டிஸ்கவர்125DTSI(தன்னியக்கம்), டிஸ்கவர்125(தன்னியக்கம்இல்லாதது), சிரி100(லீற்றருக்கு 101 கிலோமீற்றர் பாவனை), பொக்சர் ஏ.ரி., பீ.வை.கே., ஸ்பிறிட் (பெண்களுக்குரியது)

அத்துடன்- முச்சக்கரவண்டிகளும் (ஓட்டோ) (பட்டர் கலர், பச்சை, நீலம்) இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

மோட்டார்சைக்கிளுடன் தலைக்கவசம், ஜக்கட் இலவசமாக வழங்கப்படும் இன்றே உங்கள் தெரிவுக்கு உடன் நாடுங்கள்.

*குறிஞ்சி றேடேர் இல. 75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

2 வருட அல்லது கி.மீ. 30,000த்துக்கான தூரம் இணையற்ற உத்தரவாதம்

பஜாஜ்

# குறிஞ்சி றேடேர்

தொலைபேசி இலக்கம் : 021 222 7623.
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் அதிகாரம் பெற்ற விற்பனையாளர்.
குறிஞ்சி றேடேர் (42530)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




### அமரர் கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (குட்டி)

[பிரபல வான்சாரதியும், உரிமையாளரும்]

**திதி: சஷ்டி, நட்சத்திரம்: ரேவதி**



கம்பன் நாடான் காவியத்தின் கவிதையல்லவா
கவியரசு இளங்கோவின் கனவல்லவா
இம்பர் நாடு இனிது பெற்ற இனியவனல்லவா
எம் இதய வானில் சிறகடிக்கும் ஈசனல்லவா
உம்பர் நாடு உவகை கொண்ட உதயமல்லவா
உலகினுக்கு ஒளி கொடுத்த சக்தியல்லவா
நம்பும் வாய்மை கொண்ட நிறை மனிதனல்லவா
நம்மை ஏங்க வைத்தது ஏனடா?



நாளை (01.03.2005) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுச் சமுகந்தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

தகவல்: தந்தை:இ.கதிர்காமநாதன். (கார்-நாதன்-புத்தூர்) (42527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை விலை அதிகரிப்பில் அரசு - பிறிமா இடையே இழுபறி

## மானியத்தை அரசாங்கம் ரத்து

கொழும்பு,பெப்.28

பிறிமா நிறுவனத்திற்கான மானியத்தை அரசு நாளை முதலாம் திகதி முதல் ரத்துச் செய்திருப்பதால் கோதுமை மாவின் விலை அதிகாரிப்புத் தொடர்பாக அரசுக்கும் பிறிமா நிறுவனத்திற்கும் இடையில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

பிறிமா நிறுவனத்திற்கான மானியத்தை இடைநிறுத்தியிருப்பதாக அந்த நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார் திறை சேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர. இனிமேல கோதுமை மாவிலையில் மாற்றங்களைச் செய்ய வேண்டுமாயின் பிறிமா நிறுவனப்பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுமதியைப் பெறவேண்டுமெனவும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடிதத்தின பிரதியொன்று பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோதுமை மா அத்தியாவசியப் பண்டமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இது தொடர்பான எந்தத்தீர்மானத்தையும் பிறிமா நிறுவனம் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையுடன ஆலோசித்தே மேறகொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், தமக்கான மானியத்தை அரசு நிறுத்தினால் கோதுமை மாவின் விலையை கிலோவுக்கு 6 ரூபாவால் அதிகரிக்கவேண்டி வரும் என்று பிறிமா நிறுவனம் எச்சரித்துள்ளது. இதனால் விலை அதிகரிப்பு விடயத்தில் அரசுக்கும் பிறிமா நிறுவனத்துக்கும் இடையில் இழுபறிநிலை தோன்றியுள்ளது.

இதற்கிடையில் சந்தையில் கோதுமை மா விலை அதிகரிப்பைத் தடுப்பதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினூடாக (ச.தொ.ச.) கோதுமை மாவை மேலும் இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கோதுமை மா விலையை பிறிமா நிறுவனம் அதிகரித்தால் அதனை எதிர்கொள்ள வேண்டுமென்பதாலேயே அரசும் இவ்வாறு மாவை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

இதற்கான அமைச்சரவைப்பத்திரத்தை வர்த்தக, வாணிபத் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பித்துள்ளார். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினூடாக மா இறக்குமதி செய்வது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிதியமைச்சு, வர்த்தக அமைச்சு ஆகியவற்றின் கூட்டுக் குழு ஒன்றை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-10)


NEW STOCK

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட IBM, DELL கணனிகள் உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில்

PENTIUM II, 266MHz, 64MB 4.2 GB
PENTIUM II, 300MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 350MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 400MHz, 64MB 6.4 GB
PENTIUM III, 500MHz,128MB 10 GB
WITH 15", 17" DELL, SIEMENS MONITORS
ரூபா 22000.00 லிருந்து

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution
Kantharmadam, Jaffna. T.P:0212222674
web:www.stpjaf.com


# இத்தாலிக்கு ஆள்களைக் கடத்தும் முகவரொருவர் பொலீஸாரால் கைது

கொழும்பு,பெப்.28

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இத்தாலிக்கு ஆள்களைக் கடத்தும் முகவர்களில் முக்கிய நபர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் அவருடன் இணைந்து செயற்படும் மாபியா கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

தெற்குக் கடற்பரப்பிலிருந்து உள்ளூர் ட்ரோலர் படகுகளில் ஆள்களை ஏற்றி யேமன் கடற்பரப்புக்குக் கொண்டுசென்று, அங்கு மாபியாக்களிடம் கையளிக்கும் வேலையை இவர் செய்துவந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

யேமன் கடற்பரப்பில் அவர்களைப் பொறுப பேற்கும் மாபியாக்கள் அவர்களை தமது கப்பலில் ஏற்றிச்சென்று கெய்ரோ ஊடாக இத்தாலிக்கு அழைத்துச்செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்படும் இளைஞர்கள் இலங்கைக் கடற்பரப்பின் ஊடாகக் கடந்த காலங்களில் இத்தாலிக்குக் கடத்தப்பட்டுள்ளனர்.

இப்படிச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற பெரும் எண்ணிக்கையானோர் பொலீஸாராலும், கடற்படையினராலும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-10)

## விளையாட்டு விழாக்கள்

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் அதிபர் ம.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்எஸ் தங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவார். (எ-51)

★ ★ ★

யாழ்.புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய மைதானத்தில் அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகளில் யாழ். வலயக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராசா பிரதம விருந்தினராகவும், குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை வண.பிதா சி.யஸ்ரின் அடிகளார், குருநகர் ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் அ.அகஸ்ரின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (எ-51)

★ ★ ★

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தின் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழையமாணவர் சங்கத்தின் உபதலைவரும் வடஇலங்கை சர்வோதயத்தின் பொறுப்பாளருமான க.புஸ்பமணி கலந்துகொள்வார். (எ-7)

## விண்ணப்பம்

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவிற்குச் செல்லவுள்ள யாத்திரிகர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களை குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியும் என இச்சங்கம் அறிவித்துள்ளது. (எ-51)


மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு இளைய தளபதி விஜய் (சிறப்புத் தோற்றம்). நவீனா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடித்த
சுக்ரன்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

லக்சுமி சினிமா இணுவில்
விக்ரம், கிரன் மற்றும் பலர் நடித்த
ஜெமினி (ரீஸ்ஸ்)
தினசரி: 11.00, 3.00, 7.00

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த
மாணிக்கம்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/40667)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
28.02.2005 முதல் விக்ரம் - திரிசா - விவேக் - விஜயகுமார் நடித்த
சாமி
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)
எமது அடுத்த வெளியீடு தாவடி மைந்தன் ஜெய்ஆஹாஷ் நடிக்கும்
குருதேவா

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி (ரீல்ஸ்)
தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.) (C/39654)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், வீசு நடித்த
ஜி (ரீல்ஸ்)
மூன்றாவது வாரம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, (பு.நே.)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றித்துதி ஆராதனையும்

மண்ணில் 1944 - 02 - 08



விண்ணில் 2005 - 01 - 29

திருமதி

### அருந்தவநாயகி வின்சஸ்லாஸ்

(தாதிய உத்தியோகத்தர் தனியார் வைத்தியசாலை)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த இவரது மறைவை ஒட்டி நேரடியாகவும், தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுககும் பல வகைகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

இன்று 28.02.2005 எமது இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும் நன்றித்துதி ஆராதனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

21/3புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு. (42561)(43-11-17)

திரு.திருமதி சிவலிங்கம் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியை அழைப்பும்



அன்னை மடியில் 01 - 08 - 1945

### அமரர் நாரணி கந்தசாமி

ஆண்டவன் அரவணைப்பில் 29 - 01 - 2005

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
அன்பு எனும் அரவணைப்பில்
அறிவு எனும் ஆழ்கடலாய்
தீங்கு தனை விரும்பாது
பாசத்தின் உறைவிடமாய்
எல்லோருக்கும் வழிகாட்டி
எங்களை ஆறாத்துயரில் மூழ்கவிட்டீரே
இன்று முப்பத்தொன்று ஆனது
ஆறவில்லை எம் நெஞ்சம்
மீளாத் துயரில் வாழ்கின்றோம்!
உள்ளத்தில் உங்களை எண்ணித் தவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (28.02.2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 40, பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சிவகாமிப்பிள்ளை (குஞ்சுமணி)

(இணுவில் மேற்கு)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது ஜெயமங்களம், ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு என்ற முகவரியில் வசித்தவருமான திருமதி சிவகாமிப்பிள்ளை பரராசசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் பரராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மகளும் புஷ்பராணி, சிவானந்தரதி (இந்தியா), கௌரி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் சகாதேவன், அருமைத்துரை (இந்தியா), தயாளன் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் திரு.திருமதி மயூரன், அபிராமி (கனடா), மயூரன் (ஜேர்மனி), கோகிலவதனன் (மருத்துவபீடம், இந்தியா), ஐங்கரன், நோவா, நாகோமி (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜெயமங்களம்,
ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (42564)(43-11-17)

தகவல்:
மகள் - புஷ்பராணி,
மருமகன் - சகாதேவன்.
T.P.:021 222 5022

## திருமதி கந்தையா சிவக்கொழுந்து

சாரதா வீதி, சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும கொண்ட கந்தையா சிவக்கொழுந்து 27.02.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் இராசையா (முள்ளியவளை), சொர்ணம், காலஞ்சென்ற சிவசம்பு (மெக்கானிக்), நகுலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற ஞானசுந்தரம், சகுந்தலாதேவி, திரவியம் (மெக்கானிக்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தி (ஆசிரியை, வவுனியா), இரகுபதி, அம்பிகாபதி (ஜேர்மனி), அருந்ததி (ஜேர்மனி), ரூபதி (பிரான்ஸ்), உமாபதி (கனடா), மகேஸ்வரன் (ஜேர்மனி), வத்சலா (லண்டன்), சுயேஸ்வரன் (கனடா), டாக்டர் சசிகலா (வவுனியா), டாக்டர் மைதிலி (யாழ்ப்பாணம்), மயூரன் (மருத்துவபீட மாணவன், ரஷ்யா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.2.2005) திங்கடகிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை. (42565)(43-11-17)

தகவல்:
ச.திரவியம்,
(மருமகன் - மெக்கானிக்).

## சந்தியோ ஞானப்பிரகாசம்



சென்.மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த சந்தியோ ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று (27.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தம்மாவின் அன்புக கணவரும் றூபி, ஜான்சி, செபமாலைராஜா, சந்தியாகோ காலஞ்சென்ற அனற் மற்றும் மீனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (28.02.2005) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

சென்.மேரிஸ் வீதி,
நாவாந்துறை வடக்கு. (42566)(43-11-17)

தகவல்:
சந்தியாகோ (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க மருந்து தெளித்துவிட்டு ஐம்பது பவுண்நகைகள் திருட்டு

## ஈச்சமோட்டையில் வெள்ளி இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.28

நள்ளிரவுவேளை வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் சுமார் 50 பவுண் நகைகளையும்,16 ஆயிரம்ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளி நள்ளிரவு ஈச்சமோட்டை - பாசையூர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம், வீட்டினுள் நுழைந்த திருடர்கள் மயக்க மருந்தை வீட்டிலிருந்தவர்கள் மேல் தெளித்துவிட்டு கச்சிதமாக தமது கருமத்தை நிறைவேற்றியுள்ளனர் எனக் கூறப்பட்டது.

அஞ்சலின் பெர்னாண்டோ என்பவரது வீட்டில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் தொடர்பாக, யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-190)

## வயோதிபர் சடலம் ஒப்படைப்பு

உடுப்பிட்டியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தார் எனத் தெரிவித்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இமையாணன் மேற்கு,உடுப்பிட்டியைச் சேர்ந்த இளையப்பா சோமசுந்தரம் (வயது-70) என்பவரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-13)





நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் புகழுடலுக்கு காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நிதிப்பொறுப்பாளர் செ.தமிழேந்தி ஆகியோர் மலர்மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்திய போது... அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் படங்களில் உள்ளார்.

## நாட்டுப்பற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அஞ்சலி நிகழ்வானது கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்ரரின் தலைமையில் நடைபெற்றது. இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுத் தலைவர் அருட்திரு. யோசப் அடிகளார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.அரியரத்தினம், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி சுடர்மகள், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடக இணைப்பாளர் ப.கனகலிங்கம், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, நாட்டுப் பற்றாளர் ஏரம்புவின் பூதவுடல், தமிழீழ காவல்துறை, கிளி - மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக கிளிநொச்சி, திருநகர் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12 மணியளவில் தீயுடன் சங்கமமாகியது.

(எ-10-13)

## பிரிட்டிஷ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் இலங்கையில் தங்கியிருப்பார்.

விமான நிலையத்திலிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்புக்கு அவர் அழைத்துச் செல்லப்படவுள்ளார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவர் நேரில் பார்வையிடுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது அரசின் முக்கியஸ்தர்கள் பலர் இளவரசரை வரவேற்பதற் காக விமான நிலையம் செல்லவுள்ளனர்.

(க-10-13)

## ஜனாதிபதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துங்கவை இ.தொ.காவினர் சந்திக்க முடியுமென அறிவிக்கப்பட்டாலும், அதற்கான நேர ஒதுக்கீடு குறித்து நேற்று மாலைவரை அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இ.தொ.கா. தீர்மானம்

இதற்கிடையில் நேற்று கொட்டகலையில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கட்சி முக்கியஸ்தர்களை அழைத்து மந்திராலோசனை நடத்தினார். ஜனாதிபதியைச் சந்திக்கும் பட்சத்தில் மேல் கொத்மலைத் திட்டம், மலையக இளைஞர்களுக்கு அரச நியமனங்கள் போன்ற பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதென்று அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் பலம் வாய்ந்த அமைச்சுப் பொறுப்பைக் கோரும் என்றுவெளியாகியுள்ள செய்திகள் குறித்துக் கேட்டபோது, அப்படியானயோசனை எதுவுமில்லையென்று இ.தொ.கா. உபதலைவர்களில் ஒருவரான ஆர். யோகராஜன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

(எ-க)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்ஸ, நந்தன குணதிலக ஆகியோருடன் நேற்றுமுன்தினம் இரவு நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பியினரைச் சந்திப்பதற்கு முதலில் ஜனாதிபதி விருப்பம் கொண்டிருக்கவில்லை. பிரதமரும், அரசின் முக்கியஸ்தர்களும் மேற்கொண்ட கடும் முயற்சியை அடுத்தே சந்திப்புக்கு அவர் இணங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளை ஜனாதிபதியுடன் நடக்கவிருக்கும் சந்திப்பில்ஜே.வி.பியினர் கலந்துரையாட விருக்கும் விவரங்கள் பற்றி எதுவும் அறிவிக்கப்படாத போதும் இருபகுதியினருக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தணிக்க ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-க)

## கரையோரப் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலியார் வீதியில் இடைக்கால இருப்பிட கருத்திட்டப் பணிமனையைத் திறந்துவைத்தார்

இத்திறப்பு வைபவத்தில் மாவட்ட அரச அதிபர் வீ.சண்முகம், மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகேஷ் சமர திவாரக, மாவட்ட பிரிகேடியர் வஜிர அபேகுணவர்த்தன, யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி டிரென், ஐ.ஓ.எம். பிரதிநிதி மேரி, சுகாதார அதிகாரி நிமால் அபே வர்த்தன உட்படப் பலர் பலந்து கொண்டனர். அங்கு நடைபெற்ற வைபவத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் 200 மீற்றர், ஏனைய இடங்களில் 100 மீற்றர் என்ற கரையோரப் பாதுகாப்பு வலயத் தடை குறித்து பலர் விமர்சிக்கின்றனர். உண்மையில் இதில் எந்தவித உள்நோக்கங்களும் கிடையாது. நிலத்தின் அமைவிட உயரத்தை அடிப்படையாகக் கொண்டே இது தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணம் மிகவும் தாழ்வான பகுதி அதனால்தான் 200 மீற்றர் என எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நாட்டில் 64 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 ஆயிரம் வீடு கள் அமைக்கப்படவுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வீடமைப்புப் பணிகள் யாவும் பூர்த்தியடையும்.

அகதிமுகாம்களை உடனடியாக மூடுவதே எமது நோக்கமாகும். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அனைத்து அகதிமுகாம்களும் மூடப்படவுள்ளன. - என்றார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் (UNHCR) புலம்பெயர்தோருக்கான சர்வதேச நிறுவனம் (IOM) என்பன வீட்மைப்புத் திட்டத்திற்கு அனுசரணை வழங்குகின்றன. ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (GTZ) தலைமையில் இந்தத் திட்டம் இடம்பெறவுள்ளது. (எ-க)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயங்கள் குறித்து சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்துவதென்றும் -

பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் நிலைமையை பகிரங்கப்படுத்தி மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுவதென்றும் -

ஜே.வி.பியின் அரசியல் குழு மேலும் முடிவு செய்துள்ளது என அறியவந்தது.

ஜே.வி.பியின் உயர்மட்டக் கூட்டம் ஒன்று நேற்றிரவும் கொழும்பில் நடைபெறுவதாக இருந்தது. (எ-க)


கூல் லெமனேற்றிங்

உங்களது புத்தக அட்டைகளை கூல் லெமனேற்றிங் செய்து கொள்ள நாடுங்கள்

A4 சைஸ் 1/= மட்டுமே.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P.No: 222 6722 0773068982

NEW BATCHES

எமது நிறுவனத்தில் கீழ்க் காணப்படும் பாடநெறிகளில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ளவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

DIP. IN MS OFFICE
DIP. IN DESKTOP PUBLISHING
C++
JAVA

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution
Kantharmadam, Jaffna. T.P:0212222674
web:www.stpjaf.com

G.A.Q. (பேராதனை)

★ மேற்குறிப்பிட்ட பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ இதறகுரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் 05. 03. 2005 வரை பதிவு செய்துகொள்ளலாம்.
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
★ யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய 1st in Com., G.A.Q. புதியபிரிவு விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.
★ விவரங்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(42388)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2006 பிரிவு III
INORGANIC
Mon., Wed., - 3 - 4 p.m.
INORGANIC Paper
Fri. 3 - 5 p.m.
(41231)
By:- அன்பழகன் B.Sc.

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

05.03.2005
07.03.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்,
IIS யாழ்ப்பாணம்.
(சி-41216)

கீல்வாத மூட்டு வீக்கம்

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்த முடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
(C/41215)


## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னையா வள்ளிப்பிள்ளை

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா வள்ளிப்பிள்ளை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையா (கிளாக்கர், நீதிமன்றம் மல்லாகம்) அவர்களின் அன்பு மனைவியாரும் சிவபாதம், லீலாவதி (தாதிய உத்தியோகத்தர் - அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை) தருமதேவன் (கனடா), புனிதவதி (கனடா), புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, காலஞ்சென்ற குணராஜசிங்கம் (சிமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை), சிவானந்தராஜா (கனடா), தயாவதி (கனடா), கைலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாஷினி ஞானவாசன் (கனடா), ஜெகபாலினி சுதர்ஷன், ஜினேசன், சுபாங்கினி ஜெயபாலன் (கனடா), லதாங்கினி ரவீந்திரன் (கனடா), நர்மதாங்கினி, நிரூஷன் (கனடா), நிவேதிகா (கனடா), நிஷாந்தன் (கனடா), லவுஷா (கனடா), தர்சன் (கனடா), கனெக்ஸ் (கனடா), சிறீவத்சலனி சத்தியேஸ்வரன் (கனடா), சுலக்ஷசனா, ரேணுகா, அனுஜா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வர்ஷினி (கனடா), சஞ்சயன் (கனடா), ஷரீன் (கனடா), தேயாஸ் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் 6.00 மணியளவில் நடைபெற்று, மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(சி/41223)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.